மெய்யறம்

வ. உ. சிதம்பரனார்

~~1930~~

1917

மெய்யறம்

(அரும்பதவுரையுடன்)

வ. உ. சிதம்பரம்பிள்ளை.

(இரண்டாம் பதிப்பு)

கலாரத்நாகர அச்சியந்தரசாலை, சென்னை.

1917.

இதன் காகிதம் முதலிய யாவும் சுதேசியம்.

மெய்யறம்

SIVAGNANA MUNIVAR LIBRARY TIRUNELVELI.

முன்னுரை

இந்நூலின் முதற்பதிப்புப் பிரதிகள் செலவாகிவிட்டமையாலும், இதனைப் பலர் வேண்டினமையாலும், இதனை இரண்டாம் முறை அச்சிற் பதிப்பிக்கத் துணிந்து சென்னைக் கிறிஸ்டியன் கல்லூரிச் சுதேசபாஷா அத்தியக்ஷகர் ஸ்ரீமான். த. கனகசுந்தரம் பிள்ளை (பி. ஏ.) அவர்களிடம் காட்டினேன். அவர்கள் இதில் சில சீர்திருத்தங்கள் செய்து அழகுபடுத்தித் தந்தார்கள். இதன் முதற்பதிப்புப் பிரதியின் பாடங்களுக்கும் இப்பதிப்புப் பிரதியின் பாடங்களுக்கு முள்ள பேதங்களில் பெரும்பாலன ஸ்ரீமான். பிள்ளையவர்களாற் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள். இவ்வாறு இந்நூலை மேம்படுத்தித் தந்த ஸ்ரீமான். பிள்ளையவர்களுக்கு யான் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலை மாணவரியல், இல்வாழ்வியல், அரசியல், அந்தணரியல், மெய்யியல் என்னும் ஐந்து இயல்களாகப் பகுத்துள்ளேன். அவ்வாறு யான் பகுத்ததற்குக் காரணம் மானுடப்பிறப்பை அடைந்த ஒவ்வொருவரும் முறையே மாணவராய், இல்வாழ்வாராய், அரசராய், அந்தணராய், மெய்ந்நிலையை அடையலாமென்ற எனது கோட்பாடும், அவர்கள் அவ்வாறு அந்நிலைகளை அடையவேண்டுமென்ற எனது விருப்பமுமே. "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்; சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமை யான்" என்றபடி பிறப்பால் மனிதவர்க்கத்தினரெல்லாரும் ஓரே

மெய்யறம்

தன்மையரென்பதும், ஒவ்வொருவரும் தாம் தாம் கைக்கொள்ளும் ஒழுக்கங்களுக்குத் தக்கவாறு உயர்வையும் தாழ்வையும் அடைவரென்பதும், அறிவுடையோர் பலரும் கொண்டகொள்கை. ஆதலால், இதனை வாசிக்கும் ஒவ்வொருவரும் தத்தம் நிலைக்கு உயர்ந்ததாயுள்ள நிலைக்குரிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு அவ்வுயர்ந்த நிலையை அடைந்து அவ்வாறே ஒவ்வோர் உயர்ந்த நிலையையும் அடைந்து மேம்படுவோர்களாக.

இந்நூற்குச் சிறப்புப் பாயிரம் தந்தவர்கள் கல்வி கேள்வி ஒழுக்கங்களால் நிறைந்து மெய்யந்தணராய் விளங்குகின்ற ஸ்ரீ. சகஜாநந்த சுவாமியவர்கள். இந்நூலின் முதற்பதிப்பையும், எனது மற்றைய நூல்களிற் சிலவற்றையும், இந்நூலின் இப்பதிப்பையும் அச்சிட்டு வெளிப்படுத்துவதற்குப் பொருளுதவி செய்தவர்கள், தென் ஆபிரிக்காவில் வியாபாரம் செய்து பொருளீட்டித் தக்க பரோபகாரம் செய்துகொண்டிருக்கிற ஸ்ரீமான். த. வேதியப்பிள்ளை யவர்களும், ஆங்கு "விவேகபாநு" என்னும் அரிய தமிழ்ப்பத்திரிகையை நடாத்தி ஆங்குள்ள நம் தமிழ்ச் சகோதர சகோதரிகளுக்கு நன்மை புரிந்துவரும் ஸ்ரீமான். சோ. விருத்தாசலம் பிள்ளையவர்களுமே. அவர்களுக்கு யான் செய்யும் கைம்மாறு, அவர்கள் அவ்வாறே பிறர்க்கும் உதவி புரிந்துவரவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை யான் பிரார்த்திப்பதே.

பிரம்பூர், சென்னை.
பிங்கள ஹூ ஆவணிமீ 5உ

வ. உ. சிதம்பரம் பிள்ளை.

சமர்ப்பணம்.

உலக மனைத்தினு மொளிமிக் வுடைய
நாவலந் தீவெனு மாவல மகளின்
முகமென விளங்கும் பரதகண் டத்தின்
செவ்விய நுதலாஞ் செந்தமிழ் நிலத்தின்
திலகமாமென விலகுபுன னாட்டின்
செஞ்சொலார் பெருகுந் தஞ்சைமா நகரில்
தாளாண்மை செய்து வேளாண்மை புரியும்
கார்காத் தாருட் சீர்மிக வாய்ந்த
நற்குடிப் பிறந்து பொற்புற வளர்ந்து
தமிழுமாங் கிலமுஞ்சால்புறக் கற்று
நடுவு புரிந்து நற்புகழ் பெருக்கி
இராசாங் கத்தார் இராவ்பக தூரெனும்
பட்டம் வழங்கப் பண்புடன் பெற்றுத்
தமிழினை வளர்த்துத் தமிழ்நா டளிக்கும்
வலனார் சீனி வாச பிள்ளை
யவர்க ளீகை யாதிய நற்செயல்
கண்டுள மகிழ்ந்தவர் கட்குத்
தகவொடு மெய்யறம் சமர்ப்பித் தேனே.

வ. உ. சிதம்பரம்.

மெய்யறம்

இயலதிகாரவகராதி.

இயல்.	பக்கம்.	அதிகாரம்.	பக்கம்.
அந்தண ரியல்	58	அவர்பா லொழுகல்.	39
அரசியல்	33	அழுக்கா றொழித்தல்.	12
இல்வாழ் வியல்.	19	அறம் புரிதல்.	57
மாணவ ரியல்.	3	அறிந்து சொல்லல்.	37
மெய்யியல்.	63	அறிவுடைமை.	16
அதிகாரம்	பக்கம்	அன்பு வளர்த்தல்.	30
அச்ச மொழித்தல்	26	ஆகா நட்பு.	49
அடக்க முடைமை.	15	ஆசிரியரை யடைதல்.	6
அந்தண ரியல்பு.	58	இகல்.	49
அந்தண ரொழுக்கம்.	58	இடனறிதல்.	53
அமர் செய்தல்.	54	இடுக்க ணழியாமை.	27
அமர் துணிதல்.	53	இரவு விலக்கல்	10
அமர்த் திட்பம்.	51	இல்லமைத்தல்.	18
அமர் வகை.	51	இல்வாழ் வுயர்வு.	18
அமைச் சாளுதல்.	37	இறை கொள்ளல்.	56
அரசு கொள்ளல்.	55	இன்பந் துய்த்தல்.	20
அரசு நலம்.	33	இன்னா செய்யாமை.	61
அரண்.	41	ஈகை புரிதல்.	32
அரணமைத்தல்.	42	உடம்பை வளர்த்தல்.	7
அரணளித்தல்.	42	உயிர்த்துணை கொள்ளல்	19
அரியவை பெறுதல்.	40	உயிர்த்துணையாளுதல்.	19
அருள் புரிதல்.	62	உரை நூலாளுதல்.	36

மெய்யறம்

அதிகாரம்.	
உழவு.	44
உற்றுரைப் பேணல்.	28
ஊக்க முடைமை.	17
எண்ணெழுத் தறிதல்.	13
ஒப்புர வொழுகல்	31
ஒழுக்க முடைமை.	16
ஒற்றுளூதல்.	36
கண்ணோட்டம்.	34
களவு விலக்கல்.	9
காமம் விலக்கல்.	20
கால மறிதல்.	52
குடி புரத்தல்.	56
குறிப்புணர்வுடைமை.	39
கூடா வொழுக்கம்.	59
கைத் தொழில்.	45
கொலை விலக்கல்.	3
சிற்றினம் விலக்கல்.	22
சுற்றம் பெருக்கல்.	33
சூது விலக்கல்.	9
சூழ்ச்சி புரிதல்.	34
செய்வினை யாளுதல்.	35
செருக்கொழித்தல்.	26
தவஞ் செய்தல்.	61
தன்னை யறிதல்.	6
தன்னைப் பேணல்.	28
தாய்தந்தையரைத் தொழுதல்.	4
திருந்தச் செய்தல்.	14
தீயினம் விலக்கல்.	5
துயிலொழித்தல்.	25

அதிகாரம்.	
தெரிந்து தெளிதல்.	35
தொழிலறிதல்.	13
நடுவுநிலைமை.	15
நட்பு.	48
நல்வினைஞ் சேர்தல்.	5
நன்றி யறிதல்.	14
நாடு.	40
நாட்டுச்சிறப்பு.	41
நெடுநீரொழித்தல்.	24
பகைமை.	50
பகையடு நெறி.	50
படை.	45
படைக்கலம்.	46
படையமைத்தல்.	47
படை யளித்தல்.	47
படை வகை.	46
பண்பு செய்தல்.	38
பயனில்சொல் விலக்கல்.	12
பழமை.	48
பற்றுளம் விடுதல்.	27
புகழ் செய்தல்.	32
புதல்வரைப் பேணல்.	30
புலால் விலக்கல்.	8
புறஞ்சொல்லல் விலக்கல்.	11
பெரிய வரசரைச் சேர்தல்.	38
பெரியாரைத் துணைக் கொள்ளல்.	22

அதிகாரவகராதி.

அதிகாரம்.	பக்கம்.	அதிகாரம்.	பக்கம்.
துறவடைதல்.	62	பேதைமை யொழித்தல்.	23
தூது விடல்.	54	மெய்ந்நிலை யடைதல்.	65
பரத்தையை விலக்கல்.	21	மெய்யின் அடக்கநிலை.	63
பரத்தனை விலக்கல்.	21	மெய்யுணர்தல்.	64
பொய்ம்மை விலக்கல்.	11	மெய்யுண்மை.	63
பொருட்சிறப்பு.	43	மெய்யைத்தொழுதல்.	4
பொருள்.	43	மெய்யின் விளக்கநிலை	64
பொறுமைகொள்ளல்.	31	வலி யறிதல்.	52
மடி யொழித்தல்.	25	வாணிகம்.	44
மயக்குவ விலக்கல்.	10	விதியிய லறிதல்.	3
மறவி யொழித்தல்.	24	விருந்தினரைப் பேணல்.	29
மனத்தை யாளுதல்.	7	வெஃகாமை.	60
மாணவர் கடமை.	3	வெகுளாமை.	60
மானங் காத்தல்.	59	வெண்மையொழித்தல்.	23
முயற்சி யுடைமை.	17	வெற்றி யடைதல்.	55
முறை செய்தல்.	57		
முன்னோரைப்பேணல்.	29		

சிறப்புப் பாயிரம்

மெய்யற மியற்றினேன் வையமோர் சிதம்பரம்.
வள்ளுவ ரெல்லையிம் மறைக்கு மெல்லையாம்.
மடியருங் கேட்கவோ ரடியால் யாத்தனன். ௩
நுதலிய தறவழி முதனிலை யடைதல். ௪
அறம்பொரு ளின்பம்வீ டடைதல் பயனே. ௫
விரோதி கிருதுவில் விளம்பப் பெற்றது. ௬
கண்ணனா ரரன்மனை யெண்ணியாத் திடுகளம். ௭
ஆன்றமா தேவ னகமரங் கேற்றிடம். ௮
ஏழையுங் கற்குமா றியற்றப் பட்டது. ௯
மெய்யற மென்றும் வையகத் துலாவுக. ௧0

பாயிரம்.

மெய்ப்பொரு ளருளான் மெய்யற மாகுக. ௧
வள்ளுவர் மறையின் வழிதான் மெய்யறம். ௨
அறநூல் கற்றுரைத் தாற்றுவோ னுவல்வோன். ௩
மேற்கோ ளாதியால் விளக்குத னுவறிறன். ௪
மெய்யே பொருளோ வேண்டுவோன் கொள்வோன். ௫
கொளுந்திறன் கசடறக் கொண்டோன் கொழுகல். ௬
மெய்யறம் பொருளொடு மெய்யருள் சேர்க்கும். ௭
பொய்யறம் புணர்ந்ததாற் புரிந்தனன் மெய்யறம். ௮
பொய்யற மொழிந்திவண் மெய்யற நிலவுக. ௯
மெய்யறஞ் செய்துயிர் மெய்ப்பொரு ளாகுக. ௧0

மெய்யறம்.

மாணவ ரியல்.

முதல் அதிகாரம்.—மாணவர் கடமை.

மாண்பெற முயல்பவர் மாணவ ராவர். க
ஆணும் பெண்ணு மதுசெய வுரியர். உ
இளமைப் பருவ மியைந்த ததற்கே. ௩
மற்றைய பருவமும் வரைநிலை யிலவே. ௪
அவர்கடன் விதியிய லறிந்துநன் குற்றல். ௫
அன்னைதந் தையரை யாதியைத் தொழுதல். ௬
தீயினம் விலக்கி நல்லினஞ் சேர்தல். ௭
தக்கவா சிரியராற் றன்னிய லறிதல். ௮
ஒழுக்கமுங் கல்வியு மொருங்குகைக் கொள்ளல். ௯
இறைவ னிலையினை யெய்திட முயறல். க0

உ-ம் அதி.—விதியியல் அறிதல்.

வினையின் விளைவே விதியென வந்துறும். கக
விதிசெய் கர்த்தா வினைசெய் யுயிரே. கஉ
மெய்ப்பொருள் வினையை விளைத்துயிர்க் கீயும். க௩
தீவினை விளைவிற் சேருவ துன்பம். க௪
நல்வினை விளைவி னணுகுவ வின்பம். க௫
தீவிதி வரவைச் செப்பு மடன்மடி. க௬
நல்விதி வரவை நவிலுமறி வூக்கம். க௭
விதியை மாற்றிட வினையை மாற்றுக. க௮
தீவிதி வேண்டிற் றீவினை புரிக. க௯
நல்விதி வேண்டி னல்வினை புரிக. உ0

௩-ம் அதி.— தாய்தந்தையரைத் தொழுதல்.

தாயுந் தந்தையுந் தம்முதற் றெய்வம். ௨௧
அவரிற் பெரியர் யாருமிங் கிலரே. ௨௨
அவரடி முப்பொழு தறுதினந் தொழுக. ௨௩
அவர்பணி யெல்லா மன்பொடு செய்க. ௨௪
அவருரை யெல்லா மறிந்துளங் கொள்க. ௨௫
அவர்பொருள் செய்தற் காந்துணை புரிக. ௨௬
அவர்நட் பெல்லா மவர்போற் கொள்ளுக. ௨௭
அவர்பகை யெல்லா மவர்போற் றள்ளுக. ௨௮
அவர்பெயர் விளங்கிட வறிந்தமைந் தொழுகுக. ௨௯
இல்வாழ் வரசிற் கியைந்தவ ராகுக. ௩0

௪-ம் அதி.—மெய்யைத் தொழுதல்.

மெய்யுல கெல்லாஞ் செய்முதற் கடவுள். ௩௧
உலகப் பொருட்கெலா முயிரென நிற்பது. ௩௨
அறிவா யெங்கணுஞ் செறிவா யமைந்தது. ௩௩
பகுத்தறி யுயிர்வினைப் பயனதற் களிப்பது. ௩௪
உலகந் தனதரு ணலனுற வாள்வது. ௩௫
தொழுமுறை யதனைமுப் பொழுது முள்ளல். ௩௬
உள்ளியாங் குறங்கி யுள்ளியாங் கெழுதல். ௩௭
எம்மதக் கடவுளுந் தம்ம தெனக்கொளல். ௩௮
உலகி லதனடி வேர்ந்து நிற்றல். ௩௯
அந்தண ராகி யதனிலை யடைதல். ௪0

௫-ம் அதி.—தீயினம் விலக்கல்.

தீதெலாந் தருவது தீயினத் தொடர்பே. ௪௧
தீயவர் நல்லுயிர் சிதைக்குங் கொடியர். ௪௨
பிறர்பொருள் வவ்வும் பேதை மாக்கள். ௪௩
துணைவரல் லாரை யணையுமா வினத்தர். ௪௪
அறிவினை மயக்குவ வருந்து மூடர். ௪௫
புரைவளர் பொய்ம்மை புகலுந் தீயர். ௪௬
அறனோ பொருளோ வழிக்குங் கயவர். ௪௭
பசுவின் செயலைப் பதியின தென்போர். ௪௮
இத்திறத் தாரோ டிணங்கி நிற்போர். ௪௯
தீயின மெல்லா நோயென விலக்குக. ௫0

௬-ம் அதி.—நல்லினஞ் சேர்தல்.

நன்றெலாந் தருவது நல்லினத் தொடர்பே. ௫௧
நல்லவர் மெய்ந்நிலை நண்ணி நிற்போர். ௫௨
அகத்துற வுற்றுமெய் யறிந்து நிற்போர். ௫௩
தவமு மொழுக்கமுந் தாங்கி நிற்போர். ௫௪
நன்னிலைப் புரைசெயன் மன்னி நிற்போர். ௫௫
உலகிய லெல்லா முணர்ந்து நிற்போர். ௫௬
அறனோ பொருளோ வாக்கி நிற்போர். ௫௭
பசுவினைப் பயன்பதி பயக்கு மென்போர். ௫௮
இத்திறத் தாரோ டிணங்கி நிற்போர். ௫௯
தினமு நல்லினந் தெரிந்துசேர்ந் திடுக. ௬0

எ-ம் அதி.—ஆசிரியரை யடைதல்.

அறிவினைத் தருபவ ராமா சிரியர். சுக
இருபா லாருந் தருவதற் குரியர். சுஉ
அறிவு வகையா னாசிரி யர்பலர். சுங
எவர்க்கு மொழுக்க மின்றியமை யாதது. சுச
அவர்கடன் மாணவ ரறிதிற னறிதல். சுரு
நல்வினை விரும்பு நல்லவர்க் கோடல். சுசு
மாணவர் தமைத்தம் மகாரெனப் பேணல். சுஎ
அறிந்தவை யெல்லாஞ் செறிந்திடச் சொல்லல். சுஅ
சொல்லிய செய்யவும் வல்லுந ராக்குதல். சுகூ
அறிந்தா சிரியரை யடைந்தெலா மறிக. எ0

அ-ம் அதி.—தன்னை யறிதல்.

தன்னை யறித றலைப்படுங் கல்வி. எக
மனிதரி னுடம்பு மனமான் மாவுள. எஉ
தோன்முதற் பலவின் றொகுதிகா ணுடம்பு. எங
உடம்பெலா நிற்கு முயரறி வுரன்மனம். எச
உடம்பு மனமுமா ளுயரறி வான்மா. எரு
ஆன்மா மன்முட ரூன்றன் வலிதனு. எசு
மெய்ம்முத லியமனம் வெளிச்செலும் வாயில். எஎ
உடன்மனத் தின்பி னேடு மியலது. எஅ
மனமற வறநெறி மருவு மியலது. எகூ
ஆன்மா மனத்தை யறநெறி யுய்ப்பது. அ0

மாணவ ரியல்.

௯-ம் அதி.—மனத்தை யாளுதல்.

மனமுத் தொழில்செயு மாபெருஞ் சத்தி. ௮௧
நினைக்குந் தொழிலை நிதமுஞ் செய்வது. ௮௨
அறனு மறனு மற்றிற னிலாதது. ௮௩
அதனெறி விடுப்பி னழிவுடன் கொணரும். ௮௪
அதனெறி விடாஅ தாளுத றன்கடன். ௮௫
தானதிற் பிரிந்து சந்தத நிற்க. ௮௬
எதையது நினைத்ததோ வதையுடன் காண்க. ௮௭
மறமெனில் விலக்குக வறமெனிற் செலுத்துக. ௮௮
பயனில வெண்ணிற் பயனதிற் றிருப்புக. ௮௯
ஒன்றெனும் பொழுதுமற் றொன்றெண விடற்க. ௯0

௰-ம் அதி.—உடம்பை வளர்த்தல்.

உடம்பெலாஞ் செய்யு மொப்பிலாக் கருவி. ௯௧
உடம்பை வளர்த்தலஃ தூரமுறச் செய்தல். ௯௨
உடம்புநல் லூரமுறி னுலகெலா மெய்தும். ௯௩
உரனிலா வுடம்பு வரனிலா மங்கை. ௯௪
உளந்தொழில் செயற்கு முடலுரம் வேண்டும். ௯௫
வளியன னீரதி லளவி னுறச்செயல். ௯௬
மாறுபா டிலாவூண் மறுத்துமுப் பொழுதுணல். ௯௭
சிலம்பமெய்ப் பயிற்சிக டினந்தொறுஞ் செய்க. ௯௮
பிணியுறி னுடன்பல தீர்த்தான் மருந்துணல். ௯௯
நினைந்த படியுடல் வளைந்திட வளர்க்க. ௧00

கக-ம் அதி.—கொலை விலக்கல்.

கொலையுயிர் தனையத னிலையினின் றொழித்தல். க0க
வாழு முயிர்நிதம் வருந்த வதைத்தல். க0உ
அச்செய றூண்டுத லச்செயற் குதவுதல். க0ந
இயலு மிடத்தச் செயலைத் தடாமை. க0ச
படுமுயி ரறிவுபோற் படிப்படி கொடிததாம். க0ரு
கொலைபா தகங்களுட் டலையாய தென்ப. க0சு
அதுபல பிறப்பினு மருந்துயர் விளைக்கும். க0எ
தொழுநோய் வறுமையோ டழுநோய்பெருக்கும். க0அ
கொலைபுரி வார்க்கிங் கிலைபதி யருளே. க0கூ
கொலையினை விலக்கினர்க் கூற்றமும் விலக்கும். கக0

கஉ-ம் அதி.—புலால் விலக்கல்.

புலால்புழு வரித்தபுண் ணலால்வே றியாதோ? ககக
புண்ணைத் தொடாதவர் புலாலையுட் கொள்வதென்? ககஉ
அதுவலி தருமெனின் யானையஃ துண்டதோ? ககந
அரிவலி பெரிதெனி னதுநமக் காமோ? ககச
அன்றியும் வலியோ வறிவோ சிறந்தது? ககரு
வலியோ டறிவினை மக்களுண் டாதுகொல்? ககசு
மக்களு முணது மறிமுத லுண்பதென்? ககஎ
பொறியறி விலார்க்கு மறிமுதற் றாழ்ந்தவோ? ககஅ
அவைகொன் றுண்பார்க் கருளுண் டாமோ? கககூ
அருளிலா ரருண்மயப் பொருணிலை யடைவரோ? கஉ0

கங-ம் அதி.—களவு விலக்கல்.

களவுடை யவர்தரா துளமொடொன் றெடுத்தல். கஉக
வஞ்சித் துக்கொளல் வாங்கிக் கொடாமை. கஉஉ
களவினை யேவுதல் களவிற் குதவுதல். கஉங
தடுக்கக் கூடிய விடத்ததைத் தடாமை. கஉச
உடையவர் நலத்தையொத் துருக்கொளு மிம்மறம். கஉரு
களவினைக் கள்ளரு மெள்ளுவர் பிறர்முன். கஉசு
கள்ளுநர் தடுப்பவர்க் கொல்லவும் துணிவர். கஉஎ
கள்ளுந ருடையராற் கொல்லவும் படுவர். கஉஅ
களவினாற் பலபிறப் பளவிலா வறுமையாம். கஉகூ
களவினை விலக்கினார்க் களவிலாச் செல்வமாம். கஙo

கச-ம் அதி.—சூது விலக்கல்.

சூதுவஞ் சனையதற் கேதுவாங் கருவி. கஙக
பந்தயங் குறிக்கும் பலவினை யாடல். கஙஉ
அதுபொரு டருதல்போ லனைத்தையும் போக்கும். கஙங
உற்றவூ ணுடைமுதல் விற்றிடச் செய்யும். கஙச
பொறையு மறிவும் புகழுங் கெடுக்கும். கஙரு
சூதர்தஞ் சேர்க்கையாற் சூதுகைப் புக்கிடும். கஙசு
சூதரா யினரைத் தூர நிறுத்துக. கஙஎ
காலங் கழித்திடக் கவறுகை யெடுப்பர். கஙஅ
அதனினு மாலமுண் டழிதனன் றென்க. கஙகூ
கவறுருள் களத்தைக் கனவினுங் கருதேல். கசo

௧௫-ம் அதி.—இரவு விலக்கல்.

இரவென் பதுபிறர் தரவொன் றேற்றல். ௧௪௧
இரவினிற் றாழ்ந்ததொன் றிலையென மொழிப. ௧௪௨
இரவினிற் களவு மேற்றமா மென்ப. ௧௪௩
இரந்திடப் படைத்தவன் பரந்தழி கென்ப. ௧௪௪
இரந்துயிர் வாழ்தலி னிறத்தனன் றென்ப. ௧௪௫
அவருரை யெல்லா மழியா வுண்மை. ௧௪௬
இரந்துயிர் வாழ்தலி னிழிவினு ளிழிவே. ௧௪௭
தமக்குவாழ் வாரதிற் சாதலு நன்றாம். ௧௪௮
பிறர்க்குவாழ் வாரதாற் பிழைத்தலு நன்றாம். ௧௪௯
அவரு மதைவிடி னரும்பெருஞ் சிறப்பாம். ௧௫0

௧௬-ம் அதி.—மயக்குவ விலக்கல்.

மயக்குவ வறிவினை மயக்கும் பொருள்கள். ௧௫௧
அவைகள் கஞ்சா வபின்முத லாயின. ௧௫௨
அறிவுதம் முயிரே யாதியே யுலகே. ௧௫௩
அறிவினை மயக்குத லவற்றை யழித்தலே. ௧௫௪
அறிவினை மயக்குவா ரருமறம் புரிவர். ௧௫௫
மயக்குவ சிலபிணி மாய்க்குமென் றுண்பர். ௧௫௬
மயக்காத வுண்டவை மாய்த்தலே யுத்தமம். ௧௫௭
மயக்குவ வலியினை வழங்குமென் றுண்பர். ௧௫௮
வலியினை வழங்கல்போல் வலியெலாந் தொலைக்கும். ௧௫௯
ஆதலான் மயக்குவ வற்பமுங் கொண்டிடேல். ௧௬0

களஎ-ம் அதி.—பொய்ம்மை விலக்கல்.

நிகழா ததனை நிகழ்த்துதல் பொய்ம்மை. கசுக
நிகழ்வதை யங்ஙன நிகழ்த்துதல் வாய்மை. கசுஉ
தீமையைத் தருமெனின் வாய்மையும் பொய்ம்மையாம்.
புரைதீர் நலந்தரின் பொய்ம்மையும் வாய்மையாம். கசுச
வாய்மையைத் தருவதே வாயென் வறிக. கசுரு
மற்றவை யெலாம்வெறும் வாயிலென் றறிக. கசுசு
வாய்மை யகத்தது தூய்மையை வளர்க்கும். கசுஎ
பொய்ம்மை யகத்தது புரையினை வளர்க்கும். கசுஅ
பொய்ம்மையை யாள்பவர் புன்னர காழ்வர். கசுகூ
பொய்ம்மை யொரீஇயவர் புகழ்வீ டடைவர். களஎ0

கஅ-ம் அதி.—புறஞ் சொல்லல் விலக்கல்.

புறஞ்சொலல் பிறரைப் புறத்திழித் துரைத்தல். களக
அறங்கொலு மறத்திற் புறஞ்சொலல் கொடிது. களஉ
புறஞ்சொலல் பொய்முதற் புரையெலாம் வளர்க்கும். களஙு
புறஞ்சொலல் புறனெலாம் பொருபகை யாக்கும். களச
புன்மகார் செயல்களுட் புறஞ்சொல லொன்று. களரு
புறஞ்சொலு நாவின ரறஞ்சொலல் வஞ்சம். களசு
புறஞ்சொலு நாவினர்க் கறஞ்சொலன் மடமை. களஎ
புறஞ்சொலல் கேட்டலும் புன்மையென் றறிக. களஅ
புறஞ்சொலி வாழ்தலிற் பொன்றனன் றென்ப. களகூ
ஆதலாற் புறஞ்சொல லடியொடு விடுக. கஅ0

மெய்யறம்

௧௯-ம் அதி.—பயனில் சொல் விலக்கல்.

பயனில்சொல் யார்க்கும் பயன்றராச் சொல்லே. ௧௮௧
அறியா மையினின் றச்சொல் பிறக்கும். ௧௮௨
அறியா மையினை யச்சொல் வளர்க்கும். ௧௮௩
அறிவினர் நட்பெலா மச்சொல் குறைக்கும். ௧௮௪
அறிவிலார் நட்பினை யச்சொல் பெருக்கும். ௧௮௫
பயனுள சொல்லினைச் சொலவிடா தச்சொல். ௧௮௬
பயனுள செயலினைச் செயவிடா தச்சொல். ௧௮௭
பயனில சொல்லுவர் நயனுறா ரென்றும். ௧௮௮
பயனில சொல்பவர் பதடியென் றறைப. ௧௮௯
பயனில விலக்கிப் பயனுள சொல்லுக. ௧௯0

௨0-ம் அதி.—அழுக்கா றொழித்தல்.

அழுக்கா றயலா ராக்கத்திற் புழுங்கல். ௧௯௧
அழுக்கா றுறவினோ ரிழுக்கா றிலதே. ௧௯௨
அழுக்கா றதுபோ லழிப்பதொன் றின்றே. ௧௯௩
அழுக்கா றுளவரை யொழுக்கா றிலையே. ௧௯௪
அழுக்கா றுடையார்க் காக்கமின் றாகும். ௧௯௫
வறுமையும் பசியுஞ் சிறுமையு முளவாம். ௧௯௬
அழுக்கா றுடைமைகீழ் வழுக்கா றென்ப. ௧௯௭
விலங்குளு மழுக்கா றிலங்குத லில்லை. ௧௯௮
அறிவுடை மக்க ளதுகொளல் புதுமை. ௧௯௯
அழுக்கா றுளத்துறா தறுதின மோம்புக. ௨00

௨௧-ம் அதி.—எண்ணெழுத் தறிதல்.

எண்ணெனப் படுவ தெண்ணூற் கணிதம். ௨௦௧
எழுத்தெனப் படுவ திலக்கிய மிலக்கணம். ௨௦௨
எண்ணு மெழுத்துங் கண்ணென மொழிப. ௨௦௩
எண்ணறி யார்பொரு ளெய்துத லரிது. ௨௦௪
எழுத்தறி யார்பிற வெய்துத லரிது. ௨௦௫
எண்ணெழுத் தறிந்தா ரெய்துவர் நான்கும். ௨௦௬
எண்ணு மெழுத்து மிடைவிடா தாள்க. ௨௦௭
அவைதாய் மொழிகொளி னதைமுன் பறிக. ௨௦௮
பின்பவை மிக்குள பிறமொழி யறிக. ௨௦௯
அறிவதைக் கசடற வறிந்துகொண் டொழுகுக. ௨௧௦

௨௨-ம் அதி.—தொழில் அறிதல்.

மெய்யுறுப் புக்கொடு செய்வது தொழிலே. ௨௧௧
தொழிலா லுலகந் தோன்றிநிற் கின்றது. ௨௧௨
தொழிலிலை யெனிலுல கழிவது திண்ணம். ௨௧௩
தொழிலிலார் வறுமையுற் றிழிவெலா மடைவர். ௨௧௪
அரியநற் றொழில்சில வறிதல்யார்க் குங்கடன். ௨௧௫
படைக்கல மனைத்தும் பண்பொடு பயில்க. ௨௧௬
படைவகுத் தமர்செயு நடையெலா மறிக. ௨௧௭
புவிகடல் விண்மிசை போவவூர்ந் தறிக. ௨௧௮
எவ்வகை யுருவு மெடுத்திடப் பழகுக. ௨௧௯
உழவுவா ணிகங்கைத் தொழில்சில வறிக. ௨௨௦

உங-ம் அதி.—திருந்தச் செய்தல்.

திருந்தச் செயலியல் பொருந்தச் செய்தல். உஉக
அழகு நிறைவு மமைவுறச் செய்தல். உஉஉ
திருந்தச் செய்தலே செய்தற் கிலக்கணம். உஉங
திருந்தச் செயல்பல சீர்களைக் கொணரும். உஉச
திருத்தமில் செயலாற் சீர்பல நீங்கும். உஉரு
சிறுதொழி லெனினுந் திருந்தவே செய்க. உஉசு
சிறுதொழிற் றிருத்தியே பெருந்தொழி லாவது. உஉஎ
செய்யும் தொழிலிலே சிந்தையைச் செலுத்துக. உஉஅ
தொழிலினைக் கியமாய்த் துரிதமாச் செய்க. உஉகூ
பிறர்செய் தொழிற்குப் பின்னிடா வகைசெயல். உங0

உச-ம் அதி.—நன்றி யறிதல்.

நன்றியென் பதுபிறர் நல்கிடு முதவி. உஙக
உறவினர் முதலியோ ருதவுதல் கடனே. உஙஉ
பிறர்செயு முதவியிற் பெரிதொன் றின்றே. உஙங
உதவியிற் சிறந்த துற்றுழி யுதவல். உஙச
உயர்ந்தது கைம்மா றுகவா துதவல். உஙரு
அறிதலென் றூன்று மதைநினைந் தொழுகல். உஙசு
உதவியோர் குடியெலா முயர்வுற வுள்ளல். உஙஎ
உதவியோ ரறவுரை யுடனிறை வேற்றல். உஙஅ
உதவியோர் மிகைசெயி னுடனதை மறத்தல். உஙகூ
அறிதற் களவுண் டுதவி சொலக்கெடும். உச0

௨௫-ம் அதி.—நடுவு நிலைமை.

நடுவு நிலைமைதன் னடுவு ணிற்றல். ௨௪௧
பிறவுயிர் நடுவள வுறனடு வின்மை. ௨௪௨
நடுவறப் பொருளி னடுநிற் கும்பொருள். ௨௪௩
அறனெலா நிற்பதற் கஃதா தாரம். ௨௪௪
அதுசிறி தசையி னறனெலா மழியும். ௨௪௫
நடுவினு ணிற்பவர் நலனெலாம் பெறுவர். ௨௪௬
நடுவினை விடாரை நானிலம் விடாது. ௨௪௭
நடுவிகந் தாருடன் கெடுவது திண்ணம். ௨௪௮
நடுவிகந் தாரை நரகமும் விடாது. ௨௪௯
ஆதலா னடுவி லசையாது நிற்க. ௨௫௦

௨௬-ம் அதி.—அடக்க முடைமை.

அடக்க மனம்புலத் தணுகா தடக்கல். ௨௫௧
அறிவினர்க் கென்று மடங்கி யொழுகல். ௨௫௨
அடக்கநன் னெறியி னடக்கச் செய்யும். ௨௫௩
அடக்கமில் லாமை யதைக்கடக் கச்செயும். ௨௫௪
அடக்கம் பல்வகை யாக்கமுந் தருமே. ௨௫௫
அடக்க மிலாமை யழிவெலாந் தருமே. ௨௫௬
அடக்கமெய் வீட்டிற் கடிப்படி யாகும். ௨௫௭
அப்படி யேறின ரடைவரல் வீடு. ௨௫௮
அப்படி யேறா ராழ்வர்வெந் நரகு. ௨௫௯
ஆதலா லடக்க மதுதின மோம்புக. ௨௬௦

மெய்யறம்

உஎ-ம் அதி.—ஒழுக்க முடைமை.

ஒழுக்க மென்ப துயர்ந்தோர் நடையே. உசுக
அருளறி வமைந்தவை யாள்பவ ருயர்ந்தோர். உசுஉ
அவர்நடை பெரியோர்க் கடங்கி யொழுகல். உசுங
இருக்கை யெழுத லெதிர்பின் செல்லல். உசுச
நினைவுஞ் சொல்லும் வினையுமொன் றாக்கல். உசுரு
மறநெறி விலக்கி யறநெறி செல்லல். உசுசு
தானுற வேண்டுவ வேனோர்க் களித்தல். உசுஎ
தன்னுயிர் போல்மன் னுயிர்ப் பேணல். உசுஅ
பகைசெய் தவரொடு நகைசெய் தளாவல். உசுகூ
உயிரெலா மெய்யென வோர்ந்தவை யோம்பல். உஎ0

உஅ-ம் அதி.—அறிவுடைமை.

அறிவு மறமொரீஇ யறத்தின்பா லுய்ப்பது. உஎக
அறிவெஞ் ஞான்று மற்றங் காப்பது. உஎஉ
அறிவு பகைவரா லழிக்கப் படாதது. உஎங
அறிவினை யுடையா ரனைத்து முடையர். உஎச
அறிவில் லாதார் யாதுமில் லாதார். உஎரு
அறிவிற் கறிகுறி யாவன செய்தல். உஎசு
எளியவாச் செலவுரைத் தரியவை யுணர்தல். உஎஎ
பாவம் பழிக்குப் பயந்திவ ணொழுகல். உஎஅ
உலகினோ டொன்று மொத்து நடத்தல். உஎகூ
எதிரதாக் காத்தெவ் வின்பமு மடைதல். உஅ0

மாணவ ரியல்.

உகூ-ம் அதி.—ஊக்க முடைமை.

ஊக்க முயர்வுற வுறுமன வெழுச்சி. உஅக
ஊக்க முடைமை யுலகெலாங் கொணரும். உஅஉ
ஊக்க மிலாமை யுடையவும் போக்கும். உஅங
ஊக்க முடையா ருயர்ந்தோ ராவர். உஅச
ஊக்க மிலாதா ருயிர்க்கும் பிணங்கள். உஅரு
உயர்ந்தவை யெவையோ வவையெலா முள்ளுக. உஅசு
அவற்றினு ளொன்றை யடைந்திட விரும்புக. உஅஎ
அதனை யடையு மாறெலா மெண்ணுக. உஅஅ
ஒவ்வொன் றினுமுறு மூறெலா மெண்ணுக. உஅகூ
ஊறொழித் ததையுறு முபாயமுங் கருதுக. உகூ0

ஙo-ம் அதி.—முயற்சி யுடைமை.

உயர்வுற வுழைக்கு முடற்றொழில் முயற்சி. உகூக
முயற்சி பலவகை யுயர்ச்சி நல்கும். உகூஉ
முயற்சி யூழையு முதுகிடச் செய்யும். உகூங
முயற்சி யுடையார் மூவுல காள்வர். உகூச
முயற்சி யிலாதா ரிகழ்ச்சி யடைவர். உகூரு
ஊக்கிய வொன்றனை யுடன்கொளத் துணிக. உகூசு
அதிகவூ றுறுநல் லாற்றின் முயல்க. உகூஎ
உறுமூ றொழித்தறி வுரங்கொடு தொடர்க. உகூஅ
தவறினுந் தாழ்ப்பினுந் தளர்ச்சியெய் தற்க. உகூகூ
முயற்சியின் விரிமுத னூலினு ளறிக. ஙOO

மாணவரியல் முற்றிற்று.

௩௧-ம் அதி.—இல்வாழ் வுயர்வு.

இல்வாழ் வென்பதோ ரில்லினில் வாழ்தல். ௩0௧
எதிர்பாற் றுணையுடன் வதிதன் மிகநலம். ௩0௨
இல்வாழ் வார்கட னில்லற மியற்றல். ௩0௩
என்றும்வே ளாண்மை யியற்றலே யில்லறம். ௩0௪
இல்வாழ் வில்லெனி னில்லையிவ் வுலகே. ௩0௫
இன்னிலை யெவற்றினு நன்னிலை யென்ப. ௩0௬
எந்நிலை யவர்க்கு மில்வாழ் வார்துணை. ௩0௭
அந்நிலைப் பெருக்கே யரசென வறிக. ௩0௮
அதற்கா நன்முத லன்பெனும் பொருளே. ௩0௯
அதிலாம் பயன்க ளறமுத னன்கே. ௩௧0

௩௨-ம் அதி.—இல் லமைத்தல்.

அகல நீள மரைக்கான் மைல்கொளல். ௩௧௧
ஈரிரு புறமதி லெதிரெதிர் வழிசெயல். ௩௧௨
மத்தியிற் புறமதின் மட்டமே லிற்செயல். ௩௧௩
இல்லிற் கிரா யிரமடி சதுரமாம். ௩௧௪
நிலமேன் மதிற்கு நேர்கால் கீழ்செயல். ௩௧௫
வளியன னீர்மா வழியா வகைசெயல். ௩௧௬
வளியொளி யளவினுள் வரச்செல வழிசெயல். ௩௧௭
பொருட்குஞ் செயற்கும் பொருத்தமாப் பகுத்திடல்.
நிலவறை தான்செய னிதிமிகின் மேற்செயல். ௩௧௯
நற்றரு செடிகொடி யிற்புறத் தமைத்திடல். ௩௨0

௩௩-ம் அதி.—உயிர்த்துணை கொள்ளல்.

உயிர்த்துணை தன்னுயிர்க் குதவெதிர் பாற்றுணை. ௩௨௧
அத்துணைக் கெங்கணு மொத்ததொன் றிலதே. ௩௨௨
ஆக்கமுங் கேடு மத்துணை யாலாம். ௩௨௩
கொள்ளு மறிவெலாங் கொண்டுபின் றுணைகொளல்.
கொளுமுன் கொண்டிடிற் குற்றம் பலவாம். ௩௨௫
துணையிழந் தாரை மணப்பது புண்ணியம். ௩௨௬
விரும்பா தவரை விரும்புதல் பாவம். ௩௨௭
துணைநலங் குடிமையே தூய்மையே யொழுக்கமே ; ௩௨௮
பருவமே யெழிலே பண்பே யின்சொலே ; ௩௨௯
வரவினுள் வாழ்தலே மடிதுயி லிலாமையே. ௩௩0

௩௪-ம் அதி.—உயிர்த்துணை யாளுதல்.

இருவரு ளறிவிற் பெரியவ ராள்க. ௩௩௧
ஆண்பா லுயர்வெனல் வீண்பேச் சென்க. ௩௩௨
துணைநன் காள்பவர் தொல்லுல காள்வர். ௩௩௩
தன்னுயி ருடல்பொரு டன்றுணைக் குரியன. ௩௩௪
தன்றுணை யுயிர்முத றனக்காங் குரியன. ௩௩௫
இருவராத் தோன்றினு மொருவரே யுள்ளின். ௩௩௬
தானறிந் தவையெலாந் தன்றுணைக் குணர்த்துக. ௩௩௭
தனதுநன் னெறிதுணை சார்ந்திடச் செய்க. ௩௩௮
இயற்றுவ துணையுட னெண்ணி யியற்றுக. ௩௩௯
உண்பன துணையோ டுடனிருந் துண்ணுக. ௩௪0

௩௫-ம் அதி.—இன்பந் துய்த்தல்.

துணையோ டின்பந் துய்த்தலே சுவர்க்கம். ௩௪௧
துய்க்கு முறையெலாந் தொல்லகப் பொருள்சொலும்.
முறையறி யாதுறல் குறையறி வுயிர்செயல். ௩௪௩
தன்றுணைக் கின்பந் தரத்தரத் தனக்கதாம். ௩௪௪
தானின் புறவெணிற் றனக்கதெய் தாதே. ௩௪௫
ஊட லுணர்தல் புணர்த லதன்வகை. ௩௪௬
ஊட னிமித்த முடனுட னுக்குக. ௩௪௭
இரந்தும் புணர்ந்து முணர்ந்திடச் செய்க. ௩௪௮
இருந்திரங் கத்துணை பிரிந்திடல் நீக்குக. ௩௪௯
துணையழத் துறந்துமெய் யிணைதலன் பிலாவறம். ௩௫0

௩௬-ம் அதி.—காமம் விலக்கல்.

காம மகத்தெழு மாமத வெறியே. ௩௫௧
இன்ப மறிவோ டிருந்தது பவிப்பதே. ௩௫௨
இராச்சில குறித்ததை யியைந்திட வின்பம். ௩௫௩
எண்ணிய பொழுதிடத் தியைந்திடல் காமம். ௩௫௪
காம மகப்புறக் கண்களைக் கெடுத்திடும். ௩௫௫
காம மெழுங்காற் கடவுளை யுள்ளுக. ௩௫௬
அறிவெனுந் தோட்டியா னதனைக் காக்க. ௩௫௭
அதைவளர்ப் பவைதமை யகத்தைவிட் டோட்டுக. ௩௫௮
அதையடு மொன்றை யகத்தினுட் கொள்ளுக. ௩௫௯
அதைநன் குள்ளி மதவெறி களைக. ௩௬0

இல்வாழ்வியல்.

௧௭-ம் அதி.—பரத்தையை விலக்கல்.

பரத்தை யின்பினைப் பலர்க்கும் விற்பவள். ௧௬௧
மதுரூ திரண்டினும் பொதுமகள் கொடியள். ௧௬௨
அவனடை யுடைநோக் காதியா லழிப்பள்; ௧௬௩
இன்பந் தருதல்போற் றுன்பெலாந் தருவள்; ௧௬௪
உடைமுதற் பொருளெலா முயிரொடு கவர் ௧௬௫
அவளினும் வஞ்சக ரவனியி லில்லை. ௧௬௬
அவளினுங் கள்வ ரருளின ரெனலாம். ௧௬௭
அவளுள நினைந்தாற் றவசியுங் கெடுவன். ௧௬௮
அவளா லந்நோ யழிந்தவ ரநேகர். ௧௬௯
அவளிலா நாடே யழிவுறு நாடு. ௧௭௦

௧௮-ம் அதி.—பரத்தனை விலக்கல்.

தன்றுணை யலாளைத் தழுவுவோன் பரத்தன். ௧௭௧
பரத்தை யினுமிகக் கொடியவன் பரத்தன். ௧௭௨
பொதுமக ளாதலம் முழுமக னாலே. ௧௭௩
நன்மகன் கெடுதலப் புன்மக னாலே. ௧௭௪
மறனெலா நிகழ்வதம் மாபாவி யாலே. ௧௭௫
அவனைக் காண்டலா லழியும் புகழே. ௧௭௬
அவனொடு பேசலா லழியு நிறையே. ௧௭௭
அவனொடு சேர்தலா லழியு மனைத்தும். ௧௭௮
அவனிலா நாடே யாகுநன் னாடு; ௧௭௯
அறனு மளியு மமைவுறு நாடு. ௧௮௦

௩௯-ம் அதி.—சிற்றினம் விலக்கல்.

சிற்றினங் குணத்திற் குற்றமிகு மாக்கள்; ௩௮௧
பெருமிதந் தன்னைப் பேணு மாக்கள்; ௩௮௨
அற்பத் தன்மை யளாவிய மாக்கள்; ௩௮௩
பொறியின் பங்களிற் செறிவுறு மாக்கள்; ௩௮௪
சுயநயங் கருதும் பயனிலா மாக்கள். ௩௮௫
சிற்றினம் பொருளையுஞ் சீரையு மழிக்கும்; ௩௮௬
அற்றமுங் குற்றமு முற்றிடச் செய்யும்; ௩௮௭
முற்றவ நலத்தொடு கற்றவுஞ் சிதைக்கும்; ௩௮௮
நரகும் பழியு நண்ணிடச் செய்யும். ௩௮௯
சிற்றினப் பற்றினைச் சிறிதும் வேண்டேல். ௩௯0

௪0-ம் அதி.—பெரியாரைத் துணைக்கோளல்.

பெரியா ரரியன பெரியன செய்பவர்; ௩௯௧
பொறியா ளுளத்தை யறிவா லாள்பவர்; ௩௯௨
இகபர வியலெலா மெண்ணிநன் கறிந்தவர்; ௩௯௩
நல்வினை வியலெலா நண்ணி நிற்பவர்; ௩௯௪
பின்னுறுந் தீங்கெலா முன்னறிந் தொழிப்பவர். ௩௯௫
அவரது துணைகொள லரும்பெருங் காப்பு. ௩௯௬
அவரை யறிந்துகொண் டநுதின மோம்புக. ௩௯௭
அவர்க்குரி யனவெலா மன்பொடு வழங்குக. ௩௯௮
அவரோ டெண்ணியே யனைத்துஞ் செய்க. ௩௯௯
அவ்வுரை பிழையா தியாங்கணு மொழுகுக. ௪00

இல்வாழ்வியல்.

சக-ம் அதி.—பேதைமை யொழித்தல்.

பேதைமை யேதங்கொண் டூதியம் விடுதல்; சoக
கடிந்தவை தம்பால் காதன்மை செய்தல்; சoஉ
நாணன் பருள்புகழ் பேணுத லின்மை; சoங
அறிந்துணர்ந் துரைத்து மடங்கா தொழுகல்; சoச
அறத்தை விடுத்து மறத்தைப் புரிதல். சoரு
வினைசெயின் பொய்படும் புனைகொளும் பேதை. சoசு
தமர்பசித் துழலப் பிறர்க்கிடும் பேதை. சoஎ
பேதையோர் காசுறிற் பித்தன் களித்தற்று. சoஅ
அவைபுகிற் பேதை யதனலங் குன்றும். சoகூ
பெரியார் நூல்கொடு பேதைமை களைக. சகo

சஉ-ம் அதி.—வெண்மை யொழித்தல்.

வெண்மை யறிவினை விடுத்த தன்மை; சகக
ஒண்மை யுடைபமென் றுளத்தொடு செருக்கல்; சகஉ
ஈயவேண் டியவிடத் தீயா திவறல்; சகங
குற்றம் பலவுஞ் சுற்றமாக் கொள் சகச
கற்றில கற்றவாக் காட்டி நடித்தல்; சகரு
அருமறை விடுத்துப் பெருமிறை கொள்ளல்; சகசு
செய்வன சொல்லியுஞ் செய்யா திழுக்கல்; சகஎ
உலகின ருளதென்ப திலதென மறுத்தல். சகஅ
இன்மையு ளின்மை வெண்மை யொன்றே. சககூ
ஒண்மைசா னூல்கொடு வெண்மையைக் களைக. சஉo

௪௩-ம் அதி.— நெடுநீ ரொழித்தல்.

நெடுநீர் கால நீள விடுதல்; ௪௨௧
ஒருகணச் செயலைமற் றொன்றற் கீதல். ௪௨௨
நெடுநீர் குறைபல தருமியல் புடையது. ௪௨௩
நெடுநீர் சிறிதுறி னடுமெதூஉம் பெருகி. ௪௨௪
நெடுநீ ரறவிடற் படுபொரு ளாகும். ௪௨௫
நெடுநீர் விடற்கந் நினைவையுட் கொள்ளுக; ௪௨௬
நெடுநீ ரால்வருங் கெடுதியை யுள்ளுக; ௪௨௭
எக்கணத் தெஃதுறு மக்கணத் ததைச்செயல். ௪௨௮
உறுவது பெரிதென வுற்றதை வைத்திடேல். ௪௨௯
உற்றதைச் செய்துபி னுறுவதை யெண்ணுக. ௪௩௦

௪௪-ம் அதி.—மறவி யொழித்தல்.

மறவிதன் கடமையை மனத்திலுன் னாமை. ௪௩௧
மறவியூக் கத்தின் மறுதலை யாகும். ௪௩௨
மறவி பலவகை யிறவையு நல்கும். ௪௩௩
மறவியை யடுத்தவர் மாண்பெலா மிழப்பர். ௪௩௪
மறவியை விடுத்தவர் மாநிலத் துயர்வர். ௪௩௫
மறவியை விடற்கு மனத்தினன் குள்ளுக; ௪௩௬
காலையு மாலையுங் கடவுளைத் தொழுக; ௪௩௭
மாணுயர் நூல்சில மனனஞ் செய்க; ௪௩௮
விடிந்தபின் செய்பவை விடியுமு னுள்ளுக; ௪௩௯
பகலிற் செய்தவை யிரவினன் காய்க. ௪௪௦

இல்வாழ்வியல்.

௪௫-ம் அதி.—மடி யொழித்தல்.

மடிதஞ் செயல்களின் மந்த முறுதல். ௪௪௧
மடிமெய்ம் முயற்சியின் மறுதலை யாகும். ௪௪௨
மடிதமை யொன்னார்க் கடிமைப் படுத்தும். ௪௪௩
மடியினை யுடையவர் குடியொடு கெடுவர். ௪௪௪
மடியினை விடுத்தவர் படியெலாங் கொள்வர். ௪௪௫
மடியினை விடற்கு மனத்தினன் குள்ளுக ; ௪௪௬
காலைமெய்ப் பயிற்சி சோலைநீர்க் குளிகொளல் ; ௪௪௭
இளம்பக லுண்வரை யிராவுண வரைகொளல் ; ௪௪௮
இரவினல் யாமத் தென்று முறங்குக ; ௪௪௯
பயனுள சிலசொற் பார்த்துப் பேசுக. ௪௫0

௪௬-ம் அதி.—துயி லொழித்தல்.

உடம்புள வயர்வினை யொழிப்ப துறக்கம். ௪௫௧
அவ்வயர் வளவிற் கதிகமா வது துயில். ௪௫௨
சுழுத்தியா முறக்கஞ் சுகத்தை வளர்க்கும். ௪௫௩
கனவுக ளார்துயில் கவலையை வளர்க்கும். ௪௫௪
துயில்கொள வழிவாந் துயில்விட வாக்கமாம். ௪௫௫
அயர்விற் கமையு மைம்மூன்று நாழிகை. ௪௫௬
மற்றைய பொழுதெலா மாண்டொழில் புரிக. ௪௫௭
தொழில்செயும் பொழுது துயில்வரி னுலாவுக ; ௪௫௮
கைத்தொழின் முதலிய மெய்த்தொழில் செய்க ; ௪௫௯
அவசிய மெனினுண் வரையினுஞ் சுருக்குக. ௪௬0

சஏ-ம் அதி.—செருக் கொழித்தல்.

செருக்கென் பதுதன் பெருக்கத் தகங்கொளல். சசுக
அஃதறி யாமையி னங்குர மென்ப. சசுஉ
ஆன்ம வுயர்வினை யழிப்பதச் செருக்கு. சசுந
அடங்கா வுளத்தை யளிப்பதச் செருக்கு. சசுச
அழியு முடம்பை யளிப்பது மஃதே. சசுரு
செருக்கினர் தம்மெய்த் திறத்தினைக் காணார்; சசுசு
தம்பகைத் திறத்தைத் தாழ்த்தியே யெண்ணுவர்; சசுஎ
இன்பினு மடியினு மிறந்து படுவர்; சசுஅ
துயிலு மறவியுந் தொடர்ந்து கொள்வர்; சசுகூ
புகழெலாம் போக்கி யிகழெலா மீட்டுவர். சஎ0

சஅ-ம் அதி.—அச்ச மொழித்தல்.

அச்ச மனமுட லழிவுற நடுங்கல். சஎக
அஃதறி யாமையி னந்தமென் றுணர்க. சஎஉ
அறம்புகழ் செய்தலா லழியினும் வாழ்வாம். சஎந
மறம்பழி செய்தலால் வாழினு மழிவாம். சஎச
அறம்புகழ் செய்வதற் கஞ்சுதன் மறனே. சஎரு
மறம்பழிக் கஞ்சுதன் மாண்புடை யறனே. சஎசு
அறநெறி மறந்தரின் மறநெறி யாகும். சஎஎ
மறநெறி யறந்தரி னறநெறி யாகும். சஎஅ
அச்ச முடையார்க் கெச்சமிங் கில்லை; சஎகூ
அச்ச மிலார்க்கு நிச்சலு மெச்சமாம். சஅ0

இல்வாழ்வியல்.

சகூ-ம் அதி.—இடுக்க ணழியாமை.

இடுக்கண் டுயரினைக் கொடுக்குமிடை யூறு. சஅக
இடுக்க ணுற்றழி நகினது தான்கெடும். சஅஉ
இடுக்க ணுக்குள நெகினது பெருகும். சஅங
இடுக்கண் புறத்துள தென்பது பொய்ம்மை. சஅச
இடுக்க ணகத்துள தென்பது மெய்ம்மை. சஅரு
இடுக்க ணகத்ததென் றெண்ணவஃ தழியும். சஅசு
இடுக்கணி லழியா ரிடுக்க ணழியும். சஅஎ
இடுக்கண் வலியினைக் கொடுக்குந் திறத்தது. சஅஅ
இடுக்க ணறிவினை யீயு மியலது. சஅகூ
இடுக்கணிற் றளரா ரெண்ணிய முடிப்பர். சகூ0

ருo-ம் அதி.—பற்றுளம் விடுதல்.

பற்றுளம் பொருளினிற் பற்றுள நெஞ்சம்; சகூக
ஈயா துண்ணு தெண்ணிவைத் திவறல். சகூஉ
பற்றுள மரில்பல வற்றுளும் பெரிது. சகூங
பற்றுளம் பல்வகைக் குற்றமு நல்கும். சகூச
பற்றுளத் தாலருஞ் சுற்றமு நீங்கும். சகூரு
பற்றுளத் தார்பொருண் முற்று மிழப்பர்; சகூசு
அறம்புக ழின்பமெய் யறிவுவீ டிழப்பர். சகூஎ
பற்றுளம் விடுத்தவர் பாரெலாங் கொள்வர்; சகூஅ
அறம்புக ழின்பமெய் யறிவுவீ டடைவர். சகூகூ
பற்றுளப் பேயினைச் செற்றுடன் றுரத்துக. ரு00

மெய்யறம்

ருக-ம் அதி.— தன்னைப் பேணல்.

தன்னைப் பேணுத றன்முதற் கடமை. ருOக
தன்னைப் பேணார் தாழ்வே யடைவர். ருOஉ
தன்னைப் பேணுவோர் தலைமை யெய்துவர். ருOங
பேணல் பெருமை யெலாமுற முயறல்; ருOச
உடல்பொருள் வினைபொழு திடனறிந் தின்புறல்; ருOரு
பொருளு மொழுக்கமும் புகழும் பெருக்கல்; ருOசு
உடம்போ ரியானையி னுரமுற வளர்த்தல்; ருOஎ
மனமுயர்ந் தவையெலாந் தினமுணப் பயிற்றல்; ருOஅ
அறிவின் மலனெழித் தழுக்குறு தமைதல்; ருOகூ
தன்னுயிர்த் துணையைத் தனைப்போ லாக்கல். ருகO

ருஉ-ம் அதி.—உற்றாரைப் பேணல்.

உற்றார் பெற்றா ருறவினர் பலருமே. ருகக
தன்னுற வினரெலாந் தன்றுணைக் கன்னர். ருகஉ
தன்றுணை யுறவினர் தனக்காங் கன்னர். ருகங
தாயுந் தந்தையுந் தான்றொழுந் தகையர். ருகச
அவரைப் பேணுத லரும்பெருங் கடனே. ருகரு
சோதர ருற்றுழி யாதர வாவர். ருகசு
அவரைப் பேணுத லாக்கம் பேணலே. ருகஎ
மற்றுளா ருந்தமைச் சுற்றுறப் பேணுக. ருகஅ
உற்றவர்ப் பேணிற் பற்றல ரொழிவர். ருககூ
உற்றார் பெருகி னுரமிகப் பெருகும். ருஉO

இல்வாழ்வியல்.

௫௨-ம் அதி.—விருந்தினரைப் பேணல்.

விருந்தினர் முன்னர்த் தெரிந்திலாப் புதியர். ௫௨௧
விருந்தினர்ப் பேணுவார் பெருந்தகை யோரே. ௫௨௨
விருந்தின ருண்ணலம் பொருந்தினர்க் கொள்க. ௫௨௩
விருந்தினர்க் குணவுநன் மருந்தென வழங்குக. ௫௨௪
உடையிடம் படுக்கை குடைகாப் புதவுக. ௫௨௫
உளமறிந் தேனைய வளவறிந் தீக. ௫௨௬
இன்ப மவருற வின்சொல் வழங்குக. ௫௨௭
அவரறிந் தவையெலா மறிந்துளங் கொள்க. ௫௨௮
அவருய ரொழுக்கெலா மறிந்துகைக் கொள்க. ௫௨௯
செல்வுழி யுடன்சென் றுள்ளிடப் பிரிக. ௫௩0

SIVAGNANA MUNIVAR LIBRARY TIRUNELVELI

௫௩-ம் அதி.—முன்னோரைப் பேணல்.

முன்னோர் துஞ்சிய தன்னுற வினரே. ௫௩௧
அவரைப் பேணலா லாம்பல நலமே. ௫௩௨
அவரைப் பேணுமா றடிக்கடி யுள்ளல்; ௫௩௩
அவர்தொடங் கியவறந் தவறுறா தாற்றல்; ௫௩௪
அவர்செய வெண்ணிய வறங்களு மியற்றல்; ௫௩௫
அவர்நற் குணனெலா மறிந்துகைக் கொள்ளல்; ௫௩௬
அவர்நற் செயலெலா மழியாது நிறுத்தல்; ௫௩௭
அவர்நற் பெயர்தம தருமகார்க் களித்தல்; ௫௩௮
அவர்பெயர் விளங்கிட வறம்பல புரிதல்; ௫௩௯
அவர்க்குறும் பிறவு மன்பொடு செய்தல். ௫௪0

௫௫-ம் அதி.—புதல்வரைப் பேணல்.

புதல்வரே தம்மரும் பொருளென மொழிப. ௫௪௧
நன்றுசெய் புதல்வரா னரகறு மென்ப. ௫௪௨
பொருளுங் குடியும் புகழுமா மவரால். ௫௪௩
துணைதரும் புதல்வர்க் கிணைபிற ராகார். ௫௪௪
பிறரைப் புதல்வராப் பெறுதலும் வழக்கே. ௫௪௫
மிகமிக வருந்தியும் புதல்வரை வளர்க்க. ௫௪௬
இளமையி னவர்நல் வினமுறச் செய்க; ௫௪௭
தக்கவா சிரியரைச் சார்ந்திடச் செய்க; ௫௪௮
கல்வியு மொழுக்கமுங் கைக்கொளச் செய்க; ௫௪௯
இல்வாழ் வரசுற வல்லுந ராக்குக. ௫௫0

௫௬-ம் அதி.—அன்பு வளர்த்தல்.

அன்பெனப் படுவ தகத்தி னுருக்கம். ௫௫௧
ஆர்வல ருழுறி னதுகண் ணீராம்; ௫௫௨
அவரு றொழிக்குந் தவலிலா முயற்சியாம். ௫௫௩
ஆருயிர் பெற்றதிங் கன்புசெய் தற்கே. ௫௫௪
அன்புபா ராட்டற் காமிடங் தானே; ௫௫௫
தன்னுயிர்த் துணையே தன்னரும் புதல்வரே; ௫௫௬
தன்பெற் றோரே தன்சகோ தரரே; ௫௫௭
தன்னா சிரியரே தன்னுற வினரே; ௫௫௮
தன்னூ ராரே தன்னாட் டினரே; ௫௫௯
மனிதர் சமூகமே மன்னுயி ரனைத்துமே. ௫௬0

இல்வாழ்வியல்.

௫௭-ம் அதி.—பொறுமை கொள்ளல்.

பொறுமை பிறர்பிழை பொறுக்கு நற்குணம். ௫௬௧
தன்னலங் கெடுங்காற் சகிப்பது பொறுமை. ௫௬௨
பொதுநலங் கெடுங்காற் பொறுப்பது பிழையே. ௫௬௩
வறுமைப் பிணிக்குப் பொறுமைநன் மருந்தாம் ௫௬௪
சிறுமையை வளர்ப்பது பொறுமையில் லாமை. ௫௬௫
பொறுமையைக் கொண்டவர் புவியெலாங் கொள்வர்.
பொறுமையை யிழந்தவர் புசிப்பவு மிழப்பர். ௫௬௭
ஒறுத்தார்க் கொருகணத் தொருசிறி தின்பமாம். ௫௬௮
பொறுத்தார்க் கென்றும் பொன்றா வின்பமாம். ௫௬௯
ஒறுத்தார் சிறியர் பொறுத்தார் பெரியர். ௫௭0

௫௮-ம் அதி.—ஒப்புர வொழுகல்.

ஒப்புர வூரா ரொப்பு நன்னடை. ௫௭௧
ஒப்புர வுயர்தர வொழுக்கத் தின்முதல். ௫௭௨
ஒப்புர வொழுகுவார்க் குறவினர் பெருகுவர். ௫௭௩
ஒப்புர விலாரை யொருவருந் தழுவார். ௫௭௪
அறிஞரி னொப்புர வறவோர்க் குதவல்; ௫௭௫
துறந்தா ரிறந்தார் துவ்வார்க் குதவல்; ௫௭௬
ஊர்ப்பொது நன்மைக் குழைத்தெலாஞ் செய்தல்; ௫௭௭
ஊரார் நன்மை தீமைக் குதவல்; ௫௭௮
ஊரார் வேண்டுவ வுவந்துட னளித்தல்; ௫௭௯
ஊரா ராணைக் குட்பட் டொழுகல். ௫௮0

மெய்யறம்

௫௯.—அதி.—ஈகை புரிதல்.

இல்லார்க் கீவதே யீகை யென்ப. ௫௮௧
மற்றையோர்க் கீதன் மாற்றிலா மடமை. ௫௮௨
இல்லா ருள்ளு நல்லார்க் கீக. ௫௮௩
பிறருக் கீதல் பிழையென வறிக. ௫௮௪
மடையரே மடியரே பிணியரே யில்லார். ௫௮௫
மடையர்க் கீக மதியெனு மொன்றே. ௫௮௬
மடியர்க் கீக தொழிலெனு மொன்றே. ௫௮௭
மற்றையோர்க் கீக மருந்தூ ணிடனே. ௫௮௮
உடையவ ரீதற் குரிய ராவர். ௫௮௯
ஈகை புகழ்சிறப் பெல்லா நல்கும். ௫௯௦

௬௦-ம் அதி.—புகழ் செய்தல்.

புகழுய ருலகம் புகலு நன்மொழி. ௫௯௧
புகழ்செய் தவரே பொன்றுது நிற்பவர்; ௫௯௨
அறமுத னான்கு மாற்றிமெய் யடைந்தவர். ௫௯௩
புகழ்செய் யாரே பொன்றி யொழிந்தவர்; ௫௯௪
நான்கி லொன்றையு நண்ணா திழிந்தவர். ௫௯௫
மெய்ப்புகழ் தருவன மெய்யிய லடைதல்; ௫௯௬
உலக முழுவது மொருங்கர சாளுதல்; ௫௯௭
அறமுத னான்கு மறிந்துசெய் துரைத்தல்; ௫௯௮
உற்றவர்க் கெல்லா முடனுவந் துதவல்; ௫௯௯
இல்லார்க் கெல்லா மீந்து வாழ்தல். ௬௦௦

அரசியல்.

௯௧-ம் அதி.—அரசு நலம்.

அரசுயிர் கட்குச் சிரசென நிற்பது. ௯0௧
அதனலன் மாணவ ரருநல னாளுதல்; ௯0௨
இல்வாழ் வியலெல்லா மியைந்துநன் கொழுகல்; ௯0௩
சுற்றம் பெருக்கல் சூழ்ச்சி புரிதல்; ௯0௪
தெரிந்து தெளிதல் செய்வினை யாளுதல்; ௯0௫
ஒற்றுரை நூலமைச் சொருங்குட னாளுதல்; ௯0௬
பெரியமன் னரைச்சார்ந் தரியவை பெறுதல்; ௯0௭
நாடரண் பொருள்படை நட்பினி தாளுதல்; ௯0௮
வினைத்திற னனைத்து நினைத்தறிந் தாற்றல்; ௯0௯
முறைசெய் தறம்புரிந் திறையென நிற்றல். ௯௧0

௯௨-ம் அதி.—சுற்றம் பெருக்கல்.

சுற்றமென் பதுதனைச் சூழ விருப்பது. ௯௧௧
சுற்றமு மறிவுபோ லற்றங் காக்கும். ௯௧௨
சுற்ற மின்மை யற்றமுறு விக்கும். ௯௧௩
சுற்ற முடையார் சூழ்வன முடிப்பர். ௯௧௪
சுற்ற மிலார்க்குச் சூழ்ச்சியே யில்லை. ௯௧௫
குற்றம் விடுதலாற் சுற்றுறுஞ் சுற்றம். ௯௧௬
கொடையா லின்சொலாற் கூடிடுஞ் சுற்றம். ௯௧௭
வாய்மையாற் பொறுமையாற் றூய்மையாஞ் சுற்றம். ௯௧௮
கொள்ளல் கொடுத்தலாற் குலாவுறுஞ் சுற்றம். ௯௧௯
உணர்ச்சி பழகலா லுதவுஞ் சுற்றம். ௯௨0

௩௩-ம் அதி.—கண்ணோட்டம்.

கண்ணோட்டஞ் சுற்றமேற் கண்ணோடி வீழ்தல்; ௩௨௧
சுற்றங் கண்டுழிக் குற்ற மறத்தல்; ௩௨௨
சுற்றங் கண்டுழி யுற்றன செய்தல். ௩௨௩
கண்ணிற் கழகு கண்ணோட்ட மென்ப. ௩௨௪
உளத்தொடு சேர்ந்தகண் ணோட்ட முயர்ந்தது. ௩௨௫
தீவினை யாளர்பாற் றீதுகண் ணோட்டம். ௩௨௬
கண்டுநஞ் சுணல்கரை கடந்தகண் ணோட்டம். ௩௨௭
கருமங் கெடாவகை கண்ணோடல் தக்கது. ௩௨௮
சிறுவர்பா லென்றுஞ் சிறிதுகண் ணோடுக. ௩௨௯
முறைசெயும் பொழுததை முற்றுமே விடுக. ௩௩0

௩௪-ம் அதி.—சூழ்ச்சி புரிதல்.

இயற்றுவ தெல்லா மெண்ணியே யியற்றுக. ௩௩௧
எண்ணா தியற்றுதல் கண்ணிலார் நடையாம். ௩௩௨
இயற்றத் தொடங்கி யெண்ணுத லிழுக்காம். ௩௩௩
இயற்றுமுன் செயலி னியல்பினை யாய்க. ௩௩௪
அறமெனிற் சுற்றுறு மறிஞரோ டெண்ணுக. ௩௩௫
வரவு செலவு வரும்பய னெண்ணுக. ௩௩௬
செய்வலி செய்வழி செய்பவர்க் கருதுக. ௩௩௭
வரவிற் செலவு வளருமேல் விடுக. ௩௩௮
பெரும்பயன் றராதெனிற் பேணா தொழிக. ௩௩௯
செய்வலி நெறியாள் சீரின் றேல்விடல். ௩௪0

அரசியல்.

௬௫-ம் அதி.—தெரிந்து தெளிதல்.

செயல்செய் வாரிய லுயர்குடிப் பிறப்பே; ௬௪௧
செம்மையே வாய்மையே தீவினை யின்மையே; ௬௪௨
அறிவே யன்பே யழகே யாற்றலே; ௬௪௩
பண்பே பொறையே பணிவே யின்சொலே; ௬௪௪
மறவி நெடுநீர் மடிதுயி லிலாமையே; ௬௪௫
அவாஅ வின்மையே தவாவினை யுண்மையே; ௬௪௬
பொதுச்சிறப் பெனும்ரு மதிவளர் கல்வியே. ௬௪௭
இவையெலா மியைந்துள வினமெலாந் தெரிக. ௬௪௮
அறம்பொரு ளின்புயி ரச்சத்தாற் றெளிக. ௬௪௯
தெளியுமுன் கொண்டிடேல் தெளிந்தபி னையுறேல். ௬௫0

௬௬-ம் அதி.—செய்வினை யாளுதல்.

நன்றுதீ தெண்ணி நலம்புரிவா னாள்க. ௬௫௧
வருவாய் பெருக்கி வளஞ்செய்வா னாள்க. ௬௫௨
ஊறுரு தாற்று முணர்வோனை யாள்க. ௬௫௩
உறுமூ றொழிக்கு முரவோனை யாள்க. ௬௬௪
வினையினிற் றிரியா மெய்யனை யாள்க. ௬௬௫
இதையிதான் முடிப்பனென் றதையவன் பால்விடல்.
அதன்பி னவனையே யதற்குரிய னாக்குக. ௬௫௭
வினைக்கண் வினைசெயும் வீரனை யையுறேல். ௬௫௮
செயல்செயும் பலரையுந் தினந்தொறு நாடுக. ௬௫௯
செயன்முறை செய்தவன் சிந்தைகண் டாற்றல். ௬௬0

௯௭-ம் அதி.—ஒற் றுளுதல்.

ஒற்றுவினை ஞர்பகை சுற்றமறைந் தறிவது; ௯௬௧
கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தறிவது; ௯௬௨
உறுப்பெலாஞ் சிதைப்பினு முகாஅமை வல்லது. ௯௬௩
உலகெலா நிகழ்பவை யொற்றினா லறிக. ௯௬௪
ஒற்றுரை சான்றநூல் கொற்றவன் கண்களே. ௯௬௫
ஒற்றிலார் கொற்றமும் வெற்றியு மிழப்பர். ௯௬௬
ஒற்றுரைத் ததனைவே றொற்றினா லொற்றுக. ௯௬௭
ஒற்றுமூன் றொத்திடி னுண்மையென் றறிக. ௯௬௮
ஒற்றொற் றயிரா துணரா தாள்க. ௯௬௯
ஒற்றிற் கயலா ருணர்ந்திடா தீக. ௯௭0

௯௮-ம் அதி.—உரைநூ லாளுதல்.

உரைநூல் புரைதவிர் புகழ்சால் நூல்கள். ௯௭௧
அழியாப் பொருள்களை யறைபவே புகழ்பெறும். ௯௭௨
அவைமெய்ப் பொருளே யதிற்சே ரறனே. ௯௭௩
பொருளிலா தறனிலை புணர்விலா தொழிவிலை. ௯௭௪
ஆதலா லவையு மழியாப் பொருள்களே. ௯௭௫
அவ்வைம் பொருளிலு மடங்காப் பொருளில்லை; ௯௭௬
புதுநூ லுடனே புகழ்பெற லரிது; ௯௭௭
ஆதலா லுரைநூ லவைசொலுந் தொன்னூல். ௯௭௮
அவைபல மொழியிலு மமைந்துள மறைகள்; ௯௭௯
இனியநந் தமிழி னிலக்கிய மிலக்கணம். ௯௮0

அரசியல்.

௬௯-ம் அதி.—அமைச் சாளுதல்.

அமைச்சர சிற்கினி தமைவன சொல்வது ; ௬௮௧
அரசுசொல் வனவு மமைத்துத் தருவது ; ௬௮௨
அரசின் செயற்கெலாஞ் சிரசென நிற்பது ; ௬௮௩
அரசின் குடிக்கெலா மன்னையா நிற்பது ; ௬௮௪
அரசுயிர்த் துணையா வறமெலாஞ் செய்வது. ௬௮௫
அதனல மரசிய லனைத்துநன் காளுதல் ; ௬௮௬
நூலிய லுலகிய லுண்ணறி வுடைமை ; ௬௮௭
காமமும் வெகுளியுங் கைக்கொளா தமைதல். ௬௮௮
அமைச்சுபட் டியைப்போ லமைந்தறம் புரிக. ௬௮௯
அரசுவிக் கிரமனி னன்புகொண் டாள்க. ௬௯0

௭0-அதி.—அறிந்து சொல்லல்.

நாவலர் மொழியா நலமென மொழிப. ௬௯௧
ஆக்கமுங் கேடு மதின்வரு மென்ப. ௬௯௨
அறனும் பொருளு மதின்வரு மன்ற. ௬௯௩
அகிலதிற் பதுமஃ தமைதலா னன்றே. ௬௯௪
சொல்லு மியலெலா மொல்லும் வகைசொலல். ௬௯௫
அவையறம் பொருடர வமைத்துச் சொல்லல் ; ௬௯௬
கேட்போர்க் கின்பங் கிளைக்கச் சொல்லல் ; ௬௯௭
சுருங்கத் தொகுத்து விளங்கச் சொல்லல் ; ௬௯௮
வரிசைப் படுத்தி மனங்கொளச் சொல்லல் ; ௬௯௯
மறுக்கா விதத்து மாணுறச் சொல்லல். ௭00

௭௧-ம் அதி.—பண்பு செய்தல்.

பாடறிந் தொழுகலே பண்பென மொழிப. ௭௦௧
பண்பா லுலக முண்டெனும் பொதுமறை. ௭௦௨
மக்களுட் பண்பிலார் மரமெனப் படுவர். ௭௦௩
பெரியார்க் கடங்கி யுரியவை வழங்குக. ௭௦௪
சிறியரை யடக்கிச் செய்வன செய்க. ௭௦௫
மெல்லியன் மகளிருண் மென்மைபா ராட்டுக. ௭௦௬
நண்பருள் ளுவப்புற நண்ணிநின் றொழுகுக. ௭௦௭
பகைவருள் ளுட்கமே னகைபுரிந் தொழுகுக. ௭௦௮
சலவருட் சாலச் சலஞ்செய் தொழுகுக. ௭௦௯
பண்பர சின்பெலா மெண்பதத் தாலாம். ௭௧௦

௭௨-ம் அதி.—பெரிய வரசரைச் சேர்தல்.

பெரிய வரசர் பெரியநா டாள்பவர்; ௭௧௧
சிறிய வரசர்பாற் றிறைநனி கொள்பவர்; ௭௧௨
எவ்வர சர்க்கு மிளையாத் திறத்தினர்; ௭௧௩
திறனெலாம் பெருக்கி யறனெலாஞ் செய்பவர்; ௭௧௪
மறஞ்செயு மரசரின் றிறஞ்சிதைத் தொழிப்பவர். ௭௧௫
பெரிய வரசர் பெரியார்க் கடுத்தவர். ௭௧௬
அவரைச் சேர்தலா லரும்பெரு மாக்கமாம். ௭௧௭
அமைச்சராய்ப் புலவரா யவரவை சேர்க. ௭௧௮
அருவினைத் தலைவரா யவர்பாற் சேர்க! ௭௧௯
அவருளங் கொளநடந் தரியவை பெறுக. ௭௨௦

௭௩-ம் அதி.—அவர்பா லொழுகல்.

அகலா தணுகா தனற்காய்வார் போல்க. ௭௨௧
அன்பொடு மெய்யொடு மடங்கிநின் றொழுகுக. ௭௨௨
அவர்முன் செவிச்சொ லயனகை பொருந்தேல். ௭௨௩
அவர்சொலி னலாலொன் றறிந்திட விரும்பேல். ௭௨௪
அவர்க்கா வனவு மமையங்கண் டியம்புக. ௭௨௫
அவர்விழை பவற்றை யகத்தினும் விழையேல். ௭௨௬
அவரை யுறவகை யாங்கணு மொழுகுக. ௭௨௭
இளைய ரினத்தின ரெனநினைந் திகழேல். ௭௨௮
பழையவ ரெனினும் பண்பிலா தனசெயேல். ௭௨௯
தனக்குவேண் டுவவவர் சாற்றெனிற் சாற்றுக. ௭௩௦

௭௪-ம் அதி.—குறிப்புணர் வுடைமை.

குறிப்புணர் விரண்டு கூறா கும்மே. ௭௩௧
குறிப்பி னுணர்த்தலே குறிப்பி னுணர்தலே. ௭௩௨
குறிப்பி னுணர்த்தல் கூறா துணர்த்தல். ௭௩௩
குறிப்பி னுணர்தல் கூறா துணர்தல். ௭௩௪
இவையர சமைச்சிற் கின்றியமை யாதவை. ௭௩௫
அகத்தினி லுள்ளது முகத்தினிற் றெரியும். ௭௩௬
மொழியான் மறைப்பினு முகமதைக் காட்டும். ௭௩௭
முதுவர் குறிப்பினுன் மொழிகுவ ரறிகுவர்; ௭௩௮
முகங்கண் களினுன் மொழிகுவ ரறிகுவர்; ௭௩௯
முன்சொல் குறிப்பினு மொழிகுவ ரறிகுவர். ௭௪௦

80680
மறைமலையடிகள் நூல
MARAI

எரு-ம் அதி.—அரியவை பெறுதல்.

அரியவை நட்புகா டரண்பொருள் படையே. எசக
அவையொருங் கெய்தின்வா யமிழ்தடைந் தற்றே. எசஉ
ஒன்றெய் தினும்பிற வுண்டா மெளிதே. எசந
ஒன்று மிலாது நன்றுற லரிது. எசச
அவைபெரு மன்னர்க் கரியன வல்ல. எசரு
அவருளங் கொளச்சொலி யவரவை யளிப்பர். எசசு
அவரையோர் தந்தையா வறிந்திட வுடன்பட எசஎ
அவர்பின் வேண்டுவ வளித்திட வுடன்படல்; எசஅ
அவரது பகையை யழித்திட வுடன்படல்; எசகூ
பிறவுமொத் தியைவன பெற்றெலாம் பெருக்குக. எருo

எசு-ம் அதி.—நாடு.

நாடு நாடுவ நல்குநா னிலத்தது. எருக
மலைகாடு வயல்கடல் மருவிய நானிலம். எருஉ
அவை குறிஞ்சி முல்லை மருத நெய்தல். எருந
அவைபல வுயிருணு மாமுதற் றருங்கும். எருச
ஒருமொழி வழங்குவ தொருதனி நாடு. எருரு
ஒருபெருங் கண்டத் துறுவவக நாடு எருசு
பிறபெருங் கண்டத் துறுவபுற நாடு. எருஎ
பெருங்கடன் மலையாற் பிரிவது கண்டம். எருஅ
கடலுந் தீவுமயற் கண்டமொடு சேரும். எருகூ
பலபெருங் கண்டமு முலகெனப் படுமே. எசுo

அரசியல்.

எஎ-ம் அதி.—நாட்டுச் சிறப்பு.

நாட்டுச் சிறப்புநல் வளன்பல வமைதல் ; எசுக
உயிர்களு முணக்களு மொக்க நிறைதல் ; எசுஉ
நிலநதி மலைகட னலநிதம் வளர்தல் ; எசுங
அரும்பொருள் பெரும்பொரு ளாலய மிகுதல் ; எசுச
அரணு மரசு மமைந்துநடு நிற்றல் ; எசுரு
உறுபசி யரும்பிணி செறுபகை யிலாமை ; எசுசு
செல்வமு மின்பமுஞ் சீரும் பெருகல் ; எசுஎ
ஒழுக்கமுங் கல்வியு முயர்நிலை நிற்றல் ; எசுஅ
திறந்தகை வாய்மை யறந்தவம் வளர்தல் ; எசுகூ
அருளுமெய் யறிவு மமைந்து பரவல். எஎ0

எஅ-ம் அதி.—அரண்.

அரணுயிர் பொருள்களை யளிக்குமோர் காப்பு. எஎக
இயற்கையுஞ் செயற்கையு மியைந்தர ணாகும். எஎஉ
அரண்புற வரணக வரணென விரண்டு. எஎங
புறவரண் புறநா டுருவகை காப்பது. எஎச
அகவர ணரசுயி ரரும்பொருள் காப்பது. எஎரு
கண்டத்தைச் சூழ்ந்துள கடனீர் புறவரண். எஎசு
அதனை யடுத்துள வருநிலம் புறவரண். எஎஎ
நிலத்தை யடுத்துள மலைத்தொடர் புறவரண். எஎஅ
மலையை யடுத்துள மரக்காடு புறவரண். எஎகூ
நாட்டகத் தமையுமிந் நான்கு மகவரண். எஅ0

மெய்யறம்

எகூ-ம் அதி.—அரணமைத்தல்

அரணிலார்க் கரசிலை யரசிலார்க் கரணிலை. ௭௮௧
அரணன் கமைந்திடி னரசெலாங் கொள்ளும். ௭௮௨
அரணன் கமைத்தலோ ரரும்பெருஞ் செயலே. ௭௮௩
அரணெலா முரியரா லமைத்திடல் வேண்டும். ௭௮௪
புறவர ணான்கையும் பூரண மாக்குக. ௭௮௫
நாட்டி லகவர ணலம்பெற வியற்றுக. ௭௮௬
அவற்று ளகழ்மதி லரசில மாக்குக. ௭௮௭
புறவக நெறிகளைத் திறனுடன் பொருத்துக. ௭௮௮
அவைகணத் தடைக்கவுந் திறக்கவும் வேண்டும். ௭௮௯
நெறியுள விடனெலாம் பொறிகளை நிரப்புக. ௭௯௦

அ௦-ம் அதி.—அரணளித்தல்.

அரண்படை யளிக்குமஃ தளிப்பது படையே. ௭௯௧
நீரி லரும்படை நெடுங்கல நிறுத்துக. ௭௯௨
நிலத்தி லருந்தொழில் வலப்படை நிரப்புக. ௭௯௩
மலைமதில் களிலரு வினைப்படை நாட்டுக. ௭௯௪
காட்டுட் பகைகொலுங் கரவெலா மாக்குக. ௭௯௫
அரணுட் புறனெலா மாம்விளை வாக்குக. ௭௯௬
உடைபடைக் கலமெலாந் தடைவரா தியற்றுக. ௭௯௭
அவரவர் வசிப்புக் காமில மாக்குக. ௭௯௮
அகழ்மதில் சூழிலத் தரசினம் வாழ்க. ௭௯௯
அகவரண் களையர சநுதினங் காண்க. ௮௦௦

௮௧-ம் அதி.—பொருள்.

விற்கத் தக்க விலையுடை யதுபொருள். ௮௦௧
பொருளின் பறம்புகழ் பொருந்திடச் செய்யும். ௮௦௨
பயனழ கருமையா லுயர்வஃ தடையும். ௮௦௩
விலையிடம் பொழுதால் வேறுபா டுற்றிடும். ௮௦௪
பொருண்மண் முதனாற் பூதங்கள் பிராணிகள்; ௮௦௫
அவற்றினின் றாவன வாக்கப் படுவன. ௮௦௬
உத்தம மவற்றுண் முத்தாதி மணிகளே; ௮௦௭
வயிரமுதல் ரத்நமே பொன்முத லுலோகமே; ௮௦௮
நவதா னியமே நன்மரஞ் செடிகளே; ௮௦௯
உணவுடை யிலஞ்செல வுணியமர்க் குரியவே. ௮௧௦

௮௨-ம் அதி.— பொருட் சிறப்பு.

பொருளிற் சிறந்தது புகலவொன் றில்லை. ௮௧௧
அதுநினைத் தவையெலா மளிக்குந் திறத்தது; ௮௧௨
நீர்சூ ழுலகெலா மோர்நொடி யிற்றரும்; ௮௧௩
மன்னர்மன் னவரையுந் தன்னடி வீழ்த்தும்; ௮௧௪
அருளையு மெய்யையு மடைந்திடச் செய்யும். ௮௧௫
பொருளிலா ரின்பறம் புகழ்மெய் யிழப்பர்; ௮௧௬
மடையராய்த் தம்மரு நடையெலாம் விடுவர்; ௮௧௭
அடியராய்ச் சிறியரா யலக்கணுற் றுழல்வர்; ௮௧௮
பசியினும் பிணியினும் பட்டுழந் தழிவர்; ௮௧௯
பழியுளு நரகுளு மழியா துறைவர். ௮௨௦

௮௩-ம் அதி.—உழவு.

உழவு தொழினில விளையுளைச் செய்தல். ௮௨௧
உழவ ருயிர்க்கெலா முயிரெனத் தக்கவர். ௮௨௨
உழவுசெய் முறைநிலங் கிழவர்தாங் காண்டல்; ௮௨௩
காடுநன் கழித்துக் கோடையி லுழுதல்; ௮௨௪
நிலத்திற் கிசைவன விதைத்திடத் துணிதல்; ௮௨௫
வித்திற் காமெரு மெத்த விடுதல்; ௮௨௬
வேர்செலு மாழ மேர்செல வுழுதல்; ௮௨௭
பதநன் கறிந்துநல் விதைசெல விதைத்தல். ௮௨௮
களைகட்டு நீர்பாய்ச்சிக் காத்துப் பயன்கொளல். ௮௨௯
ஒருபலன் றருநிலத் திருபல னாக்குதல். ௮௩௦

௮௪-ம் அதி.—வாணிகம்.

வாணிகம் பண்ட மாற்று நற்றொழில். ௮௩௧
அஃதெஞ் ஞான்று மரசிற் கடுத்தது. ௮௩௨
அஃதிலார்க் கரசிலை யரசிலார்க் கஃதிலை. ௮௩௩
அதன்முறை யதைநித மதிபர்தா நோக்கல்; ௮௩௪
கணிதமெப் பொழுதுநா நுனிவைத் தாளுதல்; ௮௩௫
கொள்ளிடங் கொடையிட முள்ளுணன் கறிதல்; ௮௩௬
செலவெலாங் கூட்டிச் சிறிதேற்றி விற்றல்; ௮௩௭
எவர்க்கு மொருசொலே யின்புறச் சொல்லல்; ௮௩௮
கடனனி கொடுக்கு மடனனி யொழித்தல்; ௮௩௯
பிறரது பொருளையுந் தமதெனப் பேணல். ௮௪௦

அரசியல்.

அரு-ம் அதி.—கைத் தொழில்.

கைத்தொழில் பொருடரு மெய்த்தொழி லாகும். அசக
மற்றைய விரண்டையும் வளர்ப்ப தத்தொழில். அசஉ
அத்தொழில் பேணு ரடைகுவர் வறுமை. அசங
அத்தொழில் பல.அவை யாடை நெய்தல்; அசச
உணற்குஞ் செயற்கு முதவுவ செய்தல்; அசரு
வீடரண் முதலிய மேம்பட வியற்றல்; அசசு
நிலத்திற் செல்பல வலத்தே ராக்கல்; அசஎ
நீரிற் செல்பல நாவா யாக்கல்; அசஅ
நிலநீ ருள்ளுள பலபொரு ளெடுத்தல்; அசகூ
காப்பிற் காம்பல கருவிக ளியற்றல். அரு0

அசு-ம் அதி.—படை.

பகையுயிர் படுத்தலாற் படையெனப் பட்டது. அருக
உலகெலா மளிப்பதோ ருத்தம வரசே. அருஉ
அரசரண் பொருள்களை யளிப்பது படையே. அருங
இன்பமும் புகழு மீவது படையே. அருச
மெய்யிய லடையச் செய்வதும் படையே. அருரு
படையிலா ரரசரண் படுபொரு ளிழப்பர்; அருசு
அறம்புக ழின்பறி வருண்மெய் யிழப்பர்; அருஎ
அடியராய்ச் சிறைபுகுந் தலக்கணுற் றுழல்வர்; அருஅ
பிணியொடும் பசியொடும் பிணக்குற் றழிவர்; அருகூ
நரகமும் பழியுங் கிருகமாக் கொள்வர். அசு0

௭௭-ம் அதி.—படை வகை.

படைவகை நான்கெனப் பகருவர், அவைதாம். ௭௬௧
முன்னோர் வழிவரு மூலப் படையே; ௭௬௨
நாட்டுளார்க் கூட்டு நாட்டுப் படையே. ௭௬௩
காட்டுளார்க் கூட்டுங் காட்டுப் படையே; ௭௬௪
கொடைநட் பால்வரும் கூலிப் படையே; ௭௬௫
நான்கிலொவ் வொன்று நால்வகைப் படும்அவை; ௭௬௬
நிலமிசை யமர்செயும் வலமிகு படையே; ௭௬௭
நிலக்கீ ழமர்செயு நேரிலாப் படையே; ௭௬௮
நீர்மிசை யமர்செயு நீர்க்கலப் படையே; ௭௬௯
வானிற் றிரிதரும் விமானப் படையே. ௭௭௦

௭௮-ம் அதி.—படைக்கலம்.

படைக்கலம் பகைசெறப் படையெடுப்பன. ௭௭௧
படைக்கல மில்லெனிற் படையுயின் றுகும். ௭௭௨
படைக்கல மீட்டல் பயப்பொரு ளீட்டலே. ௭௭௩
பகைத்திற னெண்ணியே படைக்கல மியற்றுக. ௭௭௪
விசையெரி கூருரம் விடமிக வியற்றுக. ௭௭௫
வெடிப்பன தெறிப்பன விசைமிகல் வேண்டும். ௭௭௬
எறிவன விடுவன வெரிமிகல் வேண்டும். ௭௭௭
குத்துவ வெட்டுவ கூர்மிகல் வேண்டும். ௭௭௮
உடைப்பன வறுப்பன வுரமிகல் வேண்டும். ௭௭௯
படைகொலும் படைக்கலம் விடமிகல் வேண்டும். ௭௮௦

௮௯-ம் அதி.—படை யமைத்தல்.

பகைத்திற னழிக்கும் வகைத்தே ரியற்றுக. ௮௮௧
பகைக்குழூச் சிதைக்கும் வயக்களி றீட்டுக. ௮௮௨
குறித்த நெறிசெலுங் குதிரைகள் கொள்ளுக. ௮௮௩
இறத்தலி னின்புறூஉ மறத்தினர்க் கூட்டுக. ௮௮௪
தேர்மா பரியாள் சேனையா வகுக்க. ௮௮௫
அறைப்படுத் தேகுதற் காஞ்சில வியற்றுக. ௮௮௬
கடல்செலும் பலவகைக் கலங்களு மியற்றுக. ௮௮௭
விண்செலும் பலவகை விமானமு மியற்றுக. ௮௮௮
அவையாள் படைபடைக் கலமொடு வழங்குக. ௮௮௯
வரிசைத் தலைவரா வுரியரை யுயர்த்துக. ௮௯0

௯0-ம் அதி.—படை யளித்தல்.

படைதன் னுயிரெனப் பார்த்துமன் னோம்புக. ௮௯௧
தினம்படை நோக்கித் திறன்மிகுந் திடச்செயல். ௮௯௨
அவரவர் திறனறிந் தளிக்க வேதனம். ௮௯௩
படையுவப் புறச்சீர் பரிசிலும் வழங்குக. ௮௯௪
அமரிற் படுபவர் தமர்தமை யோம்புக. ௮௯௫
படைகளின் கடன்தாம் பகைகொலல் கொலப்படல்;
கூற்றையு மெதிர்த்திடு மாற்றலொடு செல்லல்; ௮௯௭
இழைத்த திகவாது திறந்துபுகழ் கொள்ளல்; ௮௯௮
தலைவரின் சொல்லெலா நிலையுறப் பணிதல்; ௮௯௯
தலைவரைத் தமதுநற் றாயினும் பேணுதல். ௯00

௯௧-ம் அதி.—நட்பு.

நட்பெனப் படுவது பெட்புறு கேண்மை. ௯௦௧
அதுநன் மகாருளத் தலரு நன்மலர். ௯௦௨
அதனிய லடுத்தவ ரகநக் விரும்பல்; ௯௦௩
இடித்துக் கூற லிடுக்கண் களைதல். ௯௦௪
புணர்ச்சி பழகுத லுணர்ச்சியா னட்பாம். ௯௦௫
ஆய்ந்துநன் னட்பறிந் ததன்பின் கொள்ளுக. ௯௦௬
ஆய்ந்தறி யாதுறல் சாந்துயர் தருமே. ௯௦௭
மருவிப் பன்னா ளொருவா தாய்க. ௯௦௮
வாய்க்கா லனைய மாந்தரை நட்டல். ௯௦௯
சூட்டுக் கோனிகர் துணைவரைக் கொள்க. ௯௧௦

௯௨-ம் அதி.—பழமை.

பழமையெத னாலுங் கிழமைகுன் றாதது. ௯௧௧
அஃதுயர் நட்பி னருங்கனி யாகும். ௯௧௨
பழமையி னின்பம் பயப்பதொன் றில்லை. ௯௧௩
பழயவர் பிழைப்பினும் பழமைமா றற்க; ௯௧௪
அழிவந்த செய்யினு மன்பறா ராகுக. ௯௧௫
பழமையை மறப்போர் பாம்பினுங் கொடியர்; ௯௧௬
அலக்கணுங் கேடு மழிவு முறுவர்; ௯௧௭
பழமையை விடாரைப் பாரும் விடாது. ௯௧௮
பழையார்ப் பிரியாரை விழையாரும் விழைப. ௯௧௯
பழமையைப் புதுமையிற் பார்ப்போர் பெரியர். ௯௨௦

கூங-ம் அதி.—ஆகா நட்பு.

ஆகா நட்பிவ ணழிவுபழி தருவது. கூஉக
அவைநனி தருபவ ரறிவில் பேதையர்; கூஉஉ
உறுவதே தூக்குஞ் சிறுமைமிகு மாந்தர்; கூஉங
வினையொடு தஞ்சொல் வேறுபடு வஞ்சகர்; கூஉச
ஒல்லுங் கரும முஞற்றாக் கள்ளர்; கூஉரு
மிகைபல விழைத்து நகைசெயும் பகைவர்; கூஉசா
பக்கத் துறைந்து பதம்பார்த் திருப்பவர்; கூஉஎ
அட்டைபோ லொட்டிநின் றரியவை கவர்வோர்; கூஉஅ
கள்ளுங் கவறுங் கைவிடாப் பதகர்; கூஉகூ
விடருந் தூர்த்தரு நடருமுள் ளிட்டோர். கூஙO

கூச-ம் அதி.—இகல்.

இகலெனப் படுவ துளமாறு பாடு. கூஙக
நகறரு நட்பிற் கின்மறு தலையாம். கூஙஉ
அதனிய லடுத்தவ ரழமனம் விரும்பல்; கூஙங
இடருற மொழிதல் விடுக்கண் புரிதல். கூஙச
எதிருணர் வழுக்கா நிறுகுளத் தால்வரும். கூஙரு
இகலுள மென்று மெரிந்து துன்புறும். கூஙசா
அன்போ தட்பமோ வின்போ வுறாது. கூஙஎ
இகல்பா ராட்டுவார் தகல்காண் பரிது; கூஙஅ
அருமைச் சுற்றமு மாக்கமு மிழப்பர்; கூஙகூ
கேடு மழிவுங் கிளைகளாக் கொள்வர். கூசO

௯௫-ம் அதி.—பகைமை.

பகைமை யென்ப திகலது முதிர்வு. ௯௪௧
பழமையின் மறுதலே பகைமையென் றறிக. ௯௪௨
பகைமையுட் கொடியதுட் பகைமையென் றறைப. ௯௪௩
அதனினுங் கொடியதிக் கரியவை கவர்வது. ௯௪௪
பகைமையை யுட்கொள றகைமையன் றென்ப. ௯௪௫
அதைவிடா தவர்பா லியாதிவண் செய்வது? ௯௪௬
அன்புபா ராட்டி யவரை வளர்ப்பதோ? ௯௪௭
ஈகையென் றவர்கரத் தின்னுயிர் விடுப்பதோ? ௯௪௮
அறமென வெண்ணித் துறவினைக் கொள்வதோ? ௯௪௯
தம்மா ருயிரைத் தாமழித் தொழிவதோ? ௯௫0

௯௬-ம் அதி.—பகையடு நெறி.

பகைமையை விடாரைப் பகைத்தடல் வழக்கு. ௯௫௧
பகையினை யடற்குப் பலபல நெறியுள. ௯௫௨
எதற்கும் பொருளறி வின்றியமை யாதவை. ௯௫௩
ஒல்லு மிடத்தெலாம் வெல்லு மமர்நலம். ௯௫௪
ஒல்லா விடத்தினி லுபாய முறைநலம். ௯௫௫
முறையின் சொல்லே கொடைபிரிப் பழிப்பே. ௯௫௬
முன்னைய விரண்டுந் தன்னினும் வகைசெயல். ௯௫௭
பின்னைய விரண்டும் பெருந்துணை கொடுசெயல். ௯௫௮
உட்பகை யினரை யுட்பகைத் தடுக. ௯௫௯
ஒட்டிமேய் வாரை யொட்டிமேய்ந் தடுக. ௯௬0

௧௭-ம் அதி.—அமர்வகை.

அமர்வகை நான்கென வறைகுவ ரவைதாம், ௧௬௧
வெட்சியே வஞ்சியே யுழிஞையே தும்பையே. ௧௬௨
வெட்சிநல் லுயிர்களை விரோதிபாற் கவர்தல்; ௧௬௩
அதினிக ழும்பல வமருஞ் செயலும். ௧௬௪
வஞ்சிமண் ணசைமன் னஞ்சவடல் குறித்தல்; ௧௬௫
அதினிக ழும்பல வமருஞ் செயலும். ௧௬௬
உழிஞையரண் முற்றி யுரத்தினைற் கோடல்; ௧௬௭
அதினிக ழும்பல வமருஞ் செயலும். ௬௧௮
தும்பைமுன் வந்தமன் மைந்துதலை யழித்தல்; ௧௬௯
அதினிக ழும்பல வமருஞ் செயலும். ௧௭0

௧௮-ம் அதி.—அமர்த் திட்பம்.

அமர்த்திட்ப மொருவ ரகத்திட்ப மென்ப. ௧௭௧
ஊறுறு தாற்றுக வூறுறிற் றளரேல். ௧௭௨
அமர்க்கெழும் வரையய லறியா தமைக. ௧௭௩
சொல்லுத லெளிது செய்தலோ வரிது. ௧௭௪
அமரின்மாண் டாரை யனைவருந் துதிப்பர். ௧௭௫
திண்ணியா ரெண்ணிய வெண்ணியாங் கடைவர். ௧௭௬
உளிபோல் வாருள ருருக்கண் டிகழேல். ௧௭௭
துணிந்தநல் லமரினைத் தூங்கா தாற்றுக. ௧௭௮
பெரும்பயன் றருமமர் வருந்தியுஞ் செய்க. ௧௭௯
அமர்த்திட்ப மிலாரை யாருமே வேண்டார். ௧௮0

௯௯-ம் அதி.—வலியறிதல்.

தனது படையையுந் தனத்தையு மறிக. ௯௮௧
பகையது தனத்தையும் படையையு மறிக. ௯௮௨
தன்றுணைப் படையையுந் தனத்தையு மறிக. ௯௮௩
பகைத்துணை தனத்தையும் படையையு மறிக. ௯௮௪
இருதிறப் படைகளி னேற்றத்தாழ் வறிக. ௯௮௫
இருதிறப் படைக்கல வேற்றத்தாழ் வறிக. ௯௮௬
எவ்வமர் செயறனக் கெளிதென் றறிக. ௯௮௭
அதுகொளும் பொருள்படை யாதிய வறிக. ௯௮௮
அயன்மன் வரினு டளிக்குமா றறிக. ௯௮௯
அனையவு மறிந்துபி னமர்செயத் துணிக. ௯௯0

௧00-ம் அதி.—கால மறிதல்.

வலிமிகு கூகையைப் பகல்வெலுங் காகம். ௯௯௧
ஆகுங் காலத் தரியவு மாகும். ௯௯௨
ஆகாக் காலத் தெளியவு மாகா. ௯௯௩
தனக்காங் காலஞ் சார்ந்தமர் தொடங்குக. ௯௯௪
பகைகெடுங் காலம் பார்த்தமர் தொடங்குக. ௯௯௫
பருவம் வரும்வரை பகைவர்க் கடங்குக. ௯௯௬
பருவம் வரினுடன் பகைவரை யடக்குக. ௯௯௭
கூம்பும் பொழுது கொக்கொத் தமர்க. ௯௯௮
அடக்கும் பருவத் ததுபோற் குத்துக. ௯௯௯
காலமறிந் தேசெயின் ஞாலமுட னெய்தும். ௧000

௧0௧-ம் அதி.—இட னறிதல்.

நெடும்புன லுண் முதலையா லடுங்களிறு படுமே. ௧00௧
முதனிலத் தெறும்பான் முதலையும் படுமே. ௧00௨
கால்வ னெடுந்தேர் கடலோ டாதே. ௧00௩
நிலமிசை நாவாய் நின்றோ டாதே. ௧00௪
முரண்சேர்ந் தவர்க்கு மரண்சேர்த னன்று. ௧00௫
மேவிருந் தமர்செயல் வெல்வோர்க்கு நன்று. ௧00௬
பெருமலை யரணுள பேடியும் வெல்லும். ௧00௭
சிறுபகை தன்னிடத் துறுபகை யழியும். ௧00௮
தெரியா விடத்துப் பெரியாரு மழிவர். ௧00௯
இடங்கண் டல்லது தொடங்கிடே லமரே. ௧0௧0

௧0௨-ம் அதி.—அமர் துணிதல்.

ஒருமா னிடவுயிர்க் குலகெலா மாற்றா. ௧0௧௧
பல்மா னிடர்தாம் படுமமர் நன்றோ? ௧0௧௨
படுமா னிடரிற் பலருயி னன்றாம். ௧0௧௩
இவ்வொன் றலாலமர்க் கேதுபிறி தில்லை. ௧0௧௪
ஆன்றோ ரிதனையே யமர்க்கேது வென்ப. ௧0௧௫
அளிக்கப் படுவன வழிவன வெண்ணுக. ௧0௧௬
அளிக்கப் படுவன வதிகமேற் றுணிக. ௧0௧௭
பொருள்படை யமர்த்திறன் பொழுதிட னெண்ணுக.
அவ்வபகை யிற்றனக் கதிகமேற் றுணிக. ௧0௧௯
அன்றே லுலகெலா மழியினும் விடுக. ௧0௨0

மெய்யறம்

௧௦௩-ம் அதி.— தூது விடல்.

தூதொரு வர்க்குச் சொலச்சொலுஞ் சொல்லே; ௧௦௨௧
எதிரியை யிணைத்தற் கெண்ணிய சொல்லே. ௧௦௨௨
அறவர சமர்முன ரதுவிடல் வழக்கே. ௧௦௨௩
அமையு மிடத்தெலா மதுவிடல் கடனே. ௧௦௨௪
அறியாப் பகைக்கறி வளித்தலுங் கடனே. ௧௦௨௫
தூதுரைப் பாரிய றூய்மையே வாய்மையே; ௧௦௨௬
அன்பே துணிவே யழகே யாற்றலே; ௧௦௨௭
நூலெலா மறிந்துள நுண்ணறி வுடைமையே; ௧௦௨௮
அமையமும் பிறவு மறிந்துசொலுந் திறனே; ௧௦௨௯
அமைச்சர சியலெலா மமைந்துள தன்மையே. ௧௦௩௦

௧௦௪-ம் அதி.—அமர் செய்தல்.

தூதினுந் தெருளாத் தீயரை யடன்முறை. ௧௦௩௧
அவரை யறவடா தவர்தீ தடறலே. ௧௦௩௨
அரும்படை பெருக்கி யவரஞ் சச்செயல். ௧௦௩௩
அறியா நெறியா லவரைச் சிறைகொளல். ௧௦௩௪
அவரய லமர்செயு மமையத் தரண்கொளல். ௧௦௩௫
அவரது பகைகொண் டுவர்மற வலியடல். ௧௦௩௬
அவரிற் சிலர்கொண் டுவர்மற வலியடல். ௧௦௩௭
அவரிற் சிலர்பிரித் தவர்மற வலியடல். ௧௦௩௮
அமையு மமர்செய் தவர்மற வலியடல். ௧௦௩௯
அளவுக் கதிக மடுவது தீது. ௧௦௪௦

௧௦௫-ம் அதி.—வெற்றி யடைதல்.

வெற்றிதன் பொருளை மீட்டர சாளுதல் ; ௧௦௪௧
பகைமறம் விடவும் பணியவுஞ் செய்தல் ; ௧௦௪௨
பகையவை செயும்வரை பக்கநாட் டமர்த்தல் ௧௦௪௩
பகைமற வலிகெடும் வகையெலாந் திருத்தல். ௧௦௪௪
அறஞ்செயு மாறதற் கதனு டுதல். ௧௦௪௫
வேரொடும் பகையடல் வெற்றியென் றறைப. ௧௦௪௬
அஃதரும் பெருமற மாமென் றறிக. ௧௦௪௭
அமர்பகை யெச்ச மனலதா மென்ப. ௧௦௪௮
அனலற வொழிப்பவ ரியாங்கணு முளரோ ? ௧௦௪௯
அடாஅ வகையதை யடக்கிவைத் தாளுக. ௧௦௫௦

௧௦௬-ம் அதி.—அரசு கொள்ளல்.

அரசினைத் தருதற் கருகரந் தணரே. ௧௦௫௧
அருளறி வமைந்துள வறவோ ரந்தணர். ௧௦௫௨
அவரிலை யெனிற்றரற் கருக ரரசரே. ௧௦௫௩
மறத்தினைச் சிதைக்குந் திறத்தின ரரசர். ௧௦௫௪
அவரிலை யெனிற்றரற் கருகர் வணிகரே. ௧௦௫௫
பொருள்வே ளாண்மை புரிபவர் வணிகர். ௧௦௫௬
அவரிலை யெனிற்றரற் கருகர் பிறரே. ௧௦௫௭
பிறர்பிற தொழிலெலாம் பேணியிங் காள்பவர். ௧௦௫௮
அனைவருந் தரக்கொள லதிகநன் றென்ப. ௧௦௫௯
அறஞ்செயத் தானர சாதலும் வழக்கே. ௧௦௬௦

௧௦௭-ம் அதி.—குடி புரத்தல்.

குடியெலா மகவெனக் கொண்டுமன் னோம்புக. ௧௦௬௧
அவர்க ளியாவரு மறிவுறச் செய்க; ௧௦௬௨
அரியகைத் தொழில்சில வறிந்திடச் செய்க; ௧௦௬௩
படைக்கலப் பயிற்சியிற் பாடுறச் செய்க. ௧௦௬௪
பொருளைக் குடியின் பொதுவெனப் பெருக்குக. ௧௦௬௫
குடிபொருள் செய்தற் கடிமுதல் வழங்குக. ௧௦௬௬
குடியில் வாழ்ந்திடக் குறைந்தன வழங்குக. ௧௦௬௭
குடிசெயூ தியத்துட் குடியினர் வாழ்க. ௧௦௬௮
பொன்றுநாண் மிஞ்சிய பொதுப்பொரு ளொடுகொவல்.
குடிபசித் துழல்ன்மன் குற்றமென் றறிக. ௧௦௭௦

௧௦௮-ம் அதி.—இறை கோள்ளல்.

இறைகுடி யூதியத் திறைகொளு மீளவே. ௧௦௭௧
அஃதறு பங்கிலொன் றாமென மொழிப. ௧௦௭௨
இறையிலா ரொன்றனு ளிறையினர் வாழ்க. ௧௦௭௩
ஒன்றிறை கொளங்கு வுதவிட வழங்குக. ௧௦௭௪
ஒன்றினுட் டகம்புற மோம்பலை நடாத்துக. ௧௦௭௫
ஒன்றினார் நிலநல முயர்ந்திடச் செய்க. ௧௦௭௬
ஒன்றினே கல்வியோ டுய்ரற மாற்றுக. ௧௦௭௭
மிஞ்சுவ பொதுவொடு வேந்துவைத் தோம்புக. ௧௦௭௮
புவிநலங் குன்றிற் பொதுப்பொருள் வழங்குக. ௧௦௭௯
மறமன் னிலங்கொளத் திறஞ்செய வழங்குக. ௧௦௮௦

அரசியல்.

க0கூ-ம் அதி.—முறை செய்தல்.

குடியது குற்றமன் கடிவது முறையாம். க0அக
கடியு மியலதன் காரணம் போக்கல்; க0அஉ
காரணம் போம்வரை காப்பினுள் வைத்தல். க0அங
எதற்குமோர் வகையறி விலாமையே காரணம். க0அச
செய்ததைச் செய்ய விடாமையே காப்பு. க0அரு
இவையே யறமுறை நவையே பிறவெலாம். க0அசு
முறைகண் ணோடா துயிர்வெளவ லென்ப. க0அஎ
அம்முறை யழிவுறு மரசுசெய் மறமுறை. க0அஅ
களையறி யாமை நிலக்குடி யொக்கும். க0அகூ
களையோ களையுடை நிலமோ களைவது. க0கூ0

கக0-ம் அதி.—அறம் புரிதல்.

அறமன் னுயிர்த்துய ரறுக்கு நல்வினை. க0கூக
அவ்வினை யுயிர்தொறும் வெவ்வே றாகும். க0கூஉ
அவையுடன் கண்டுநன் காற்றுதன் மன்கடன். க0கூங
துயர்முத லுயிர்க்கெலாந் துப்புர விலாமை; க0கூச
அதனத னிடத்ததை யமர்த்திவை யாமை; க0கூரு
ஆறறி வினர்க்குநல் லறிவில் லாமை. க0கூசு
உயிரெலா மதனத னுணவுற வோம்புக. க0கூஎ
அதனத னெல்லையு ளமர்த்திவைத் தாளுக. க0கூஅ
ஆறறி வினர்க்குநல் லறிவெலாம் வழங்குக. க0கூகூ
அறவிரி திருக்குற ளாதியா லறிக.

அரசியல் முற்றிற்று.

அந்தணரியல்.

௱௧௧-ம் அதி.—அந்தண ரியல்பு.

அந்தண ரறத்தொடு செந்தண்மை பூண்டவர். ௧௧0௧
மாணவர் தம்மையே வளர்க்கு மியல்பினர். ௧௧0௨
அடுத்தவர் தம்மையு மளிப்பவரில் வாழ்வார். ௧௧0௩
அரசர்நல் லுயிரெலா மளிக்குந் திறத்தினர். ௧௧0௪
அனைத்துயிர் தம்மையு மளிப்பவ ரந்தணர். ௧௧0௫
முதன்முந் நிலையினர் முகைமலர் காயனர். ௧௧0௬
அந்தணர் மெய்ந்நிலை யடைந்தவர் கனிவிதை. ௧௧0௭
விதையே மரமிலை மென்முகை யாதியாம். ௧௧0௮
மெய்யே யுலகுயி ரைந்நிலை யினராம். ௧௧0௯
முறைமுகை விதையா முதனிலை யுயிர்மெயாம். ௧௧௧0

௧௧௨-ம் அதி.—அந்தண ரொழுக்கம்.

ஓதலி னந்தணர்க் கொழுக்கநன் றென்ப. ௧௧௧௧
அந்தணர்க் கொழுக்க மனற்குச் சூடுபோன்ம் ௧௧௧௨
ஒழுக்கமு மறிவு முடனிகழ் தகைமைய. ௧௧௧௩
ஒன்றின் றெனின்மற் றதுவு மிலதாம். ௧௧௧௪
ஞானச் சொல்லெலாங் கானற் சலமாம். ௧௧௧௫
ஒழுக்க மறிதற் குரைகலின் றென்ப. ௧௧௧௬
பகுத்தறி வறனு லுகுத்தவ ரேயவர். ௧௧௧௭
ஒழுக்கமெவ் வுயிர்க்கு மூறுசெய் யாமை; ௧௧௧௮
இயலு நன்றெலா மிடைவிடா தியற்றல். ௧௧௧௯
இழுக்கமிவ் விரண்டிலொன் றியற்றத் தவறல். ௧௧௨0

௧௧௩-ம் அதி.—கூடா வொழுக்கம்.

சாமிக ளுட்பலர் காமிக ளாயினர். ௧௧௨௧
தேசிக ருட்பல ராசின ராயினர். ௧௧௨௨
மகந்துக ளுட்பல ரிகந்தன ரொழுக்கம். ௧௧௨௩
தம்பிரான் மறமெலா மெம்பிரா னறிவர். ௧௧௨௪
போலியந் தணர்பலர் புரியா மறமிலை. ௧௧௨௫
அரசரு ளுளர்மறங் கரவினி லாள்பவர். ௧௧௨௬
இல்வாழ் வினருளும் புல்வாழ் வினருளர். ௧௧௨௭
மாணவ ருளுமுளர் கோணல் கொண்டவர். ௧௧௨௮
உலக மென்றுநல் லொழுக்கங் கொள்ளும்? ௧௧௨௯
உள்ளும் புறமு மோரியல் பூணும்? ௧௧௩0

௧௧௪-ம் அதி.—மானங் காத்தல்.

மானமென் பதுதம் மதிப்பை விடாமை; ௧௧௩௧
தத்தம் நிலைக்குத் தாழ்ந்தசெய் யாமை; ௧௧௩௨
தத்த மியற்குத் தக்கவா றொழுகல். ௧௧௩௩
மானொரு மயிரற மாயுமவ் விடத்தே. ௧௧௩௪
மனிதர்தம் மதிப்பற வாழ்ந்திடல் வியப்பே. ௧௧௩௫
மாணவ ரிழுக்கலின் மடிதனன்றே. ௧௧௩௬
இல்லின ரிவறலி னிறத்த னன்றே. ௧௧௩௭
அரசறஞ் செயாமையி னழித னன்றே; ௧௧௩௮
தாழ்ந்தார்த் தெறுதலிற் சாத னன்றே. ௧௧௩௯
அந்தணர் வெகுளலி னிழப்புக னன்றே. ௧௧௪0

ககரு-ம் அதி.—வெஃகாமை.

வெஃகுதல் பிறர்பொருள் விரும்புங் குற்றம். ககசக
வெஃகலே மறத்தின் வித்தென மொழிப. ககசஉ
அதுதீ யவாவி னங்குர மாகும்; ககசங
காமமுங் களவுங் கவிதழை யிலைவிடும்; ககசச
கொலையும் பொய்யுமாங் கொம்பொடு கிளைவிடும்; ககசரு
அழிதகு மறங்களா மரும்பொடு மலர்விடும்; ககசசா
பழியுங் கேடுமா மழியாக் காய்தரும்; ககசஎ
அழிபல நிரயக் கழிபெருங் கனிதரும்; ககசஅ
பொறிவழித் துன்பமாஞ் செறிபல சுவையாம். ககசகூ
ஆதலால் வெஃகலே யறவே விடுக. ககரு0

ககசா-ம் அதி.—வெகுளாமை.

வெகுளி யகத்தெழும் வெங்கனற் சுடரே. ககருக
இச்சுடர் தம்மையு மினத்தையு மழிக்கும்; ககருஉ
நகையை யுவகையைத் தகையைக் கொல்லும்; ககருங
பகையைச் சொல்லரும் வகையில் வளர்க்கும்; கசருச
மிகையுந் துயரு மிகுந்திடச் செய்யும்; ககருரு
வெகுளியை விடற்கவ் விருப்பமுட் கொள்ளுக; ககருசா
வெகுளியுள் ளெழுங்கா னகுதலே புரிக; ககருஎ
வெகுளியின் கேடெலாம் விரைந்துட னெண்ணுக;
ஆடிகொண் டுடன்முக வழகினை நோக்குக. ககருகூ
வெகுளியை யடுதலே தகுதியென் றடுக. ககசா0

அந்தணரியல்.

ககஎ-ம் அதி.—இன்னா செய்யாமை.

மன்னுயி ருளமுடல் வருத்துவ வின்னா. ககசுக
அவைதீச் செயலே யச்சொலே நினைப்பே. ககசுஉ
கொடியது செயலுட் கொலையென மொழிப. ககசுங
கொலையினு மிந்தியங் களைவது கொடியது. ககசுச
அவைகெட வதைசெய லதனினுங் கொடியது. ககசுரு
கொடியவை சொல்லுட் குறளைபொய் நிந்தை. ககசுசு
கொடியவை நினைப்புட் கொலைமுத னினைப்பு. ககசுஎ
இன்னா செய்தார்க் கின்னா வந்துறும். ககசுஅ
ஒன்றொரு கோடியாய்ப் பின்னைநாள் வந்துறும். ககசுகூ
உற்றவுயி ரறிவள வுறுத்தும் நிற்கும். ககஎ0

ககஅ-ம் அதி.—தவஞ் செய்தல்.

தவமுன் பதுதனைச் சார்ந்தநோய் பொறுத்தல்; ககஎக
உணர்வுடை யுயிர்கட் கூறுசெய் யாமை; ககஎஉ
கைந்நிலை விடாது மெய்ந்நிலை யுள்ளல்; ககஎங
மனத்தை யடக்கி வசஞ்செய முயறல்; ககஎச
அதற்கின்றி யமையா வப்பியா சங்கள். ககஎரு
தவஞ்செய லொன்றே தஞ்செய லென்ப. ககஎசு
தவத்தி னளவே தனமுறு மென்ப. ககஎஎ
தவமுடித் தாரே சமனைக் கடப்பர். ககஎஅ
தவமே யிகபரந் தருநன் முயற்சி. ககஎகூ
தவமே யியற்றுக தகவுற வேண்டுவோர். ககஅ0

௧௧௯-ம் அதி.—துறவடைதல்.

துறவியா தெனினது முறவினை யொழித்தல்; ௧௧௮௧
மன்னுயி ரெல்லாந் தன்னுயி ரென்றல்; ௧௧௮௨
தன்பொருண் மன்னுயிர் தமதென வாழல். ௧௧௮௩
துறவென விவ்வகத் துறவையே மொழிப. ௧௧௮௪
புறத்துற வெல்லாம் பொய்த்துற வாமே. ௧௧௮௫
துறவந் தணருக் குறவொழுக் கன்றோ? ௧௧௮௬
தாய்தந் தையரைத் தள்ளலுந் தன்மையோ? ௧௧௮௭
தன்னுயிர்த் துணையைத் தவிர்தலுந் தன்மையோ? ௧௧௮௮
தீயவா மிவையெலாம் பேயா டுறவே. ௧௧௮௯
தமரையே யளியார் பிறவுயி ரளிப்பரோ? ௧௧௯0

௧௨0-ம் அதி.—அருள் புரிதல்.

அருள்பல வுயிர்க்கு மன்புபா ராட்டல். ௧௧௯௧
உயிரெலா மெய்யது பயிரெனக் காண்க. ௧௧௯௨
எவ்வகை யுயிர்க்கு மின்னா செயற்க. ௧௧௯௩
அவற்றிற் காவன வனைத்து முதவுக. ௧௧௯௪
தமையவை வருத்தினு மவைதமை யோம்புக. ௧௧௯௫
அருளுடை யார்மெய்ப் பொருளுடை யதுதிடம். ௧௧௯௬
அருள்பே ரருள மருண்மிகு முண்மை. ௧௧௯௭
சுயநயச் செயலரு ளினையற வோட்டும். ௧௧௯௮
பரநயச் செயலருள் பரவிடச் செய்யும். ௧௧௯௯
அருள்விடா தவரைமெய்ப் பொருள்விடா துண்மை.

அந்தண ரியல் முற்றிற்று.

மெய்யியல்.

௧௨௧-ம் அதி.—மெய் யுண்மை.

உயர்கரி சுருதி யுத்தி யநுபவம். ௧௨0௧
தூயர் பகருரை சுருதி யென்ப. ௧௨0௨
பலமதத் தூயரும் பகர்ந்துள ருண்மை. ௧௨0௩
ஏது சிலகொண் டோதுவ துத்தி. ௧௨0௪
ஆத னிலவ லழித லிவனுள ; ௧௨0௫
அவைசெயக் கர்த்தா வவசிய மென்க. ௧௨0௬
அறிந்துள் ளுணர்தலை யநுபவ மென்ப. ௧௨0௭
இடருறும் போழ்துமெய் யெண்ணுகின் றனர்பலர் ; ௧௨0௮
பாவஞ் செயவுளம் பதைப்ப தநுபவம் ; ௧௨0௯
அரசரு மாளப் படுவ தறிகிறோம். ௧௨௧0

௧௨௨-ம் அதி.—மெய்யின் அடக்கநிலை.

அடக்க நிலைமெய் யடங்கிய வறிவு. ௧௨௧௧
அண்டப் பொருளெலா மணுக்களின் சேர்க்கை. ௧௨௧௨
வலியிலா தணுக்கண் மருவிநிற் கும்மோ ? ௧௨௧௩
அண்டஞ் சுற்றலு மதுகொண் டன்றோ ? ௧௨௧௪
ஆதலா லெங்கணு மஃதமைந் துளதே. ௧௨௧௫
அகில நிகழுமா றுள்வ தறிவு. ௧௨௧௬
அன்றே லொழுங்கா வவைகண நிகழுமோ ?, ௧௨௧௭
ஆதலா லெங்கணு மறிவமைந் துளதே. ௧௨௧௮
நிறைபொரு ளிரண்டு நிலவா வென்ப. ௧௨௧௯
ஆதலால் வலியு மறிவு மொரேபொருள். ௧௨௨0

கஉங-ம் அதி.—மெய்யின் விளக்கநிலை.

விளக்க நிலைமெய் விளங்கு மறிவு. கஉஉக
அடக்கமெய் விறகு ளடங்கிய தீப்போன்ம். கஉஉஉ
விளக்கமெய் கடைய விறகெழுந் தீப்போன்ம். கஉஉங
ஐயறி வுயிர்களின் மெய்யொளி யடங்கும். கஉஉச
ஆறறி வினரு ளவ்வொளி விளங்கும். கஉஉரு
அவர்மறஞ் செயச்செய வதனொளி குன்றும். கஉஉசு
அவரறஞ் செயச்செய வதனொளி பெருகும். கஉஉஎ
அவரொழுக் கறிந்தபோழ் தஃதக விளக்காம். கஉஉஅ
அவரொழுக் கடைந்தபோழ் தனுமலை விளக்காம். கஉஉகூ
ஒழுக்கில்வாய் ஞானமஃ தொழிக்குங் காற்றும். கஉங0

கஉச-ம் அதி.—மெய் யுணர்தல்.

ஒழுக்க முடையா ருணர்வர் மெய்யை. கஉஙக
அறனா லெண்ணில வறைந்துள வொழுக்கம். கஉஙஉ
அவற்றைவிட் டயலுற றவற்றைப் புரிதலாம். கஉஙங
அடிவிட் டேணியி னந்தமே றுவரோ. கஉஙச
அறநூல் கற்றுநின் றுண்மநூ லாய்க. கஉஙரு
ஒருட லளவி லுறுமறி வான்மா. கஉஙசு
அணையுள குளநீர்க் கான்மா வினையாம். கஉஙஎ
ஆன்மா மெய்யொன் றாணவம் வேற்றுமை. கஉஙஅ
அறஞ்சே ரொழுக்கா லாணவங் களைக. கஉஙகூ
இலகுமெய் யுண்மை யுலகுமெய்த் தோற்றம். கஉச0

மெய்யியல்.

௧௨௫-ம் அதி.—மெய்ந்நிலை யடைதல்.

உயிரியல் விடமெய் யியலுறு முடனே. ௧௨௪௧
விடலே வீடது மெய்யறஞ் செயினும். ௧௨௪௨
மெய்யற மாந்தர் மிகைவிட வுதவல் ; ௧௨௪௩
ஒழுக்க வுயிர்மெய் யுணர்ந்திட வுதவல் ; ௧௨௪௪
உலகி லுயிர்க ணிலவுற வுதவல். ௧௨௪௫
இவ்வற மரசர்க் கியற்றுத லெளிது. ௧௨௪௬
அறிவ ரரச ராகுத லரிதோ ? ௧௨௪௭
அரசரை யாள்வ தமைச்சறி வன்றோ ? ௧௨௪௮
அறிந்தில் வாழ்ந்துல காண்டறஞ் செய்க : ௧௨௪௯
அருள்கொடு மெய்யற மாற்றிமெய் யடைக. ௧௨௫0

மெய்யியல் முற்றிற்று.

மெய்யறம்

அரும்பதவுரை.

சூத்திரம். பதம். உரை.

சிறப்புப்பாயிரம்.

௧ வையம்ஓர் - உலகம்அறிந்த.
௪ நுதலியது - (இந்நூல் கூறக்) கருதியது.
௮ ஆன்ற - (கல்விகேள்விகளால்) நிறைந்த.
௮ மாதேவன் - வித்வான் மகாதேவ முதலியார்.

பாயிரம்.

௩ கற்றுரைத் தாற்றுவோன் - (தான்) கற்று (ப் பிறர்க்கு) உரைத்து (அறத்தைச்) செய்வோன்.
௪ நுவல்திறன் - சொல்லும் முறை.
௫ மெய் - கடவுள்.
௮ புரிந்தனன் - இயற்றினோன்.

நூல்.

௧ மாண் - சிறப்பு.
௪ வரைநிலை - நீக்கப்படுதல்.
௬ கடன் - கடமை.
,, நன்று - அறம்.
௫ ஆதி - கடவுள்.
௧௧ உறும் - பொருந்தும்.
௧௪ சேருவ - பொருந்துவன.
௧௫ நணுகுவ - பொருந்துவன

சூத்திரம். பதம்.

௧௬ மடன் - மடமை.
,, மடி - சோம்பல்.
௧௭ நவிலும் - சொல்லும்.
௨௬ ஆம்துணை - இயையும் உதவி.
௨௯ அமைந்து - அடங்கி.
௩௦ இயைந்தவர் - பொருந்தியவர்.
௩௩ செறிவாய் - இடையீடில்லாமல்.
௩௪ பகுத்தறியுயிர் - மனிதர்.
௩௬ உள்ளல் - நினைத்தல்.
௩௭ உள்ளியாங்கு - நினைத்த வண்ணம்.
௩௯ நடுவு - நீதி.
,, ஓர்ந்து - அறிந்து.
௪௦ நிலை - தன்மை.
௪௧ தொடர்பு - சேர்க்கை.
௪௨ சிதைக்கும் - கொல்லும், வருத்தும்.
௪௩ வவ்வும் - கவரும்.
,, மாக்கள் - இழிமக்கள்.
௪௪ துணைவர் - உயிர்த்துணைவர்.
மா இனத்தர் - மிருகக் கூட்டத்தினர்.
௪௬ புரைவளர் - குற்றத்தை வளர்க்கும்.
௪௭ கயவர் - கீழ்மக்கள்.
௪௮ பசு - உயிர் ; ஜீவன்.

௪௮ பதி - இறை ; சிவன்.
௫௫ மன்னி - பொருந்தி.
௬௨ இருபாலாரும் - ஆடவரும் மகளிரும்.
௬௫ அறிதிறன் - உணரும்வலிமை.
௬௭ மகார் - மக்கள்.
௬௮ செறிந்திட - உள்ளத்தில் அமைய.
௬௯ வல்லுநர் - வல்லவர்.
௭௧ தலைப்படும் முதன்மையுறும்.
௭௩ தொகுதி - கூட்டம்.
௭௪ அறிவுஉரன்-அறிவின்சக்தி.
௭௬ தனு - கருவி.
௭௭ மெய்முதலிய - ஐம்பொறிகள்.
௮௦ உய்ப்பது - செலுத்துவது.
௮௧ முத்தொழில் - ஆக்கல், அளித்தல், அழித்தல்.
,, அறன் - புண்ணியம்.
,, மறன் - பாவம்.
௯௦ எனும் - என்னும் - நினைக்கும்.
௯௪ உரன் - வலிமை.
,, வரன் - கணவன்.
௯௫ வளி - வாதம்.
,, அனல் - பித்தம்.
,, நீர் - சிலேத்துமம்.
௯௭ மறுத்து - குறைத்து.
௯௮ சிலம்பம் - சிலம்பவரிசை.
௯௮ மெய்ப்பயிற்சி - தேகாப்பியாசம்.
௧௦௦ விளைந்திட - வேலைசெய்ய.
௧௦௧ நிலை - உடல்.
௧௦௫ படும் - இறக்கும்.
௧௦௮ தொழுநோய் - பெருவியாதி.
௧௦௮ அழுநோய் - கண்ணீர் பெருகச்செய்யும் பிணி.
௧௧௦ கூற்றம்-எமன்.
௧௧௧ அரித்த-தின்ற.
௧௧௪ அரி-சிங்கம்.
௧௧௭ மக்களூன்-மனிதமாமிசம்.
,, மறி-ஆடு.
௧௧௮ பொறி-மெய், வாய், கண் மூக்கு, செவி.
௧௩௮ கவறு-சூதாடுகருவி.
௧௪௦ கவறுஉருள்களம்-சூதாடும் இடம்.
௧௪௩ ஏற்றம் - உயர்வு.
௧௪௪ பரந்து - பல இடங்களுக்குச்சென்று இரந்து.
௧௫௮ வழங்கும் - கொடுக்கும்.
௧௬௧ நிகழாதது - நடக்காதது. நிகழ்த்துதல் - சொல்லுதல்.
௧௬௬ வாயில் - வழிகள்.
௧௭௦ ஒரீ இயவர்-நீக்கியவர்.
௧௭௪ பொருபகை - அமர் செய்யும் விரோதிகள்.
௧௭௮ புன்மை - இழிவு.
௧௭௯ பொன்றல் - இறத்தல்.
௧௮௦ அடி - வேர்.
௧௮௮ நயன் - இன்பம்.
௧௮௯ பதடி-மனிதப்பதர்.
௧௯௨ இழுக்காறு - குற்றநெறி.
௧௯௬ சிறுமை - துன்பம்.
௧௯௭ கீழ் - கீழ்மக்கள்.
,, விழுக்காறு - வழுக்கு இன்றநெறி.
௧௯௮ இலங்குதல் - நிலவுதல்.
௨௦௮ தாய்மொழி - சுயபாஷை.
௨௧௧ மெய்யுறுப்பு - சரீர அவயவம்.
௨௧௭ நடை - ஒழுங்கு

௨௧௯ உரு - வேடம்.
௨௨௨ அமைவுற - பொருந்த.
௨௩௪ உற்றுழி - துன்பம் உற்ற இடத்து.
௨௩௯ மிகை - குற்றம்.
௨௪௧ நடுவுள் - அளவுள்; எல்லையுள்.
௨௪௩ நடுவு - நடுவுநிலைமை.
௨௪௮ இகந்தார் - நீங்கியவர்.
௨௫௧ புலம் - விஷயம் - ஸப்தம், ஸ்பரிஸம், ரூபம், ரஸம், கந்தம்.
௨௬௫ ஒன்றுக்கல் - ஒத்திருக்கச் செய்தல்.
௨௭௧ ஓரீஇ - விலக்கி.
௨௭௨ அற்றம்-இறுதி; அழிவு.
௨௭௯ ஆவன - நன்மை பயக்கும் வினைகள்.
௨௭௭ எளியவா - கேட்போர் அறியத்தக்க சொற்களாக. செல-கேட்போர் உள்ளத்தில் புகும்படி. அரியவை -(பிறர்சொல்லும்) எளிதில் அறிய முடியாத சொற்களை
௨௮0 எதிரதா - வருமுன்னர்.
௨௮௫ உயிர்க்கும் - சுவாசமிடும்.
௨௮௯ ஊறு-இடையூறு.
௨௯௩ முதுகிட - முதுகுகாட்ட - தோற்க.
௨௯௭ ஆற்றின்-வழியில்.
௨௯௮ கொடு-கொண்டு.
௨௯௯ தாழ்ப்பினும் - படினும்.
௩00 விரி-விரிவு.
௩0௨ எதிர்பால் - ஆணுக்குப்பெண்ணும், பெண்ணுக்கு ஆணும்.
௩0௪ வேளாண்மை காரம்.
௩0௯ இல்நிலை-இருக ஆசிரமம்.
௩௧௨ எதிர் எதிர் வழி - (ஒன்றற்கொன்று) எதிராக இருக்கும் இரண்டு வழிகள்.
௩௧௩ மட்டம்-மேலளவு.
௩௧௪ சதுரம்-நீளமும் அகலமும் பெருக்கக் கண்ட தொகை.
௩௧௫ மேல் - மேலுள்ள.
௩௧௬ வளி-காற்று
,, அனல்-தீ.
,, நீர்-வெள்ளம்.
,, மா - மிருகம்.
௩௧௭ ஒளி - சூரிய வெளிச்சம்.
௩௧௮ பகுத்திடல் - பிரித்திடுக.
௩௧௯ நிலஅறை-நிலக்கீழ் அறை.
,, மேல் - மேல் வீடு.
௩௨0 தரு - மரம்.
௩௨௮ குடிமை-நற்குடிப் பிறப்பு. தூய்மை - மனசுத்தம், வாக்குசுத்தம், காயசுத்தம்.
௩௨௯ பருவம் - வயது.
௩௩0 வரவு - வரும்பொருள்.
௩௩௯ இயற்றுவ - செய்யுங் கருமங்கள்.
௩௪௨ அகப்பொருள் - அகப்பொருள் நூல்.
௩௪௭ நிமித்தம் - காரணம்.
௩௫0 மெய்யிணைதல் - கடவுளை அடைதல்.
௩௫௯ அடும் - கொல்லும்.
௩௬௯ அவனியில் - உலகத்தில்.
௩௭௧ துணை - மனைவி.
௩௭௩ மூழுமகன் - அறிவிலி.
௩௭௭ நிறை - கற்பு.

அரும்பதவுரை.

ஙகூஉ பொறி - ஐம்பொறிகள்.
ஙகூங இகம் - உலகம்.
,, பரம் - கடவுள்.
ச00 பிழையாது - தவறாது.
ச0க ஏதம் - குற்றம்; நஷ்டம்.
,, ஊதியம்-குணம்; இலாபம்.
ச0உ காதன்மை - காதலிக்கும் தன்மை.
ச0கூ புணை - தளை - விலங்கு.
ச0அ களித்தற்று - கள்குடித்ததுபோலும்.
ச0கூ அவை - சபை.
சகஉ ஒண்மை - அறிவு.
சகங இவறல் - உலோபம் செய்தல்.
சகசு மறை - இரகசியம்.
,, மிறை - துன்பம்.
சகஎ இழுக்கல் - தவறுதல்.
சஉரு பம்பொருள் - வளர்பொருள்.
சஉகூ உறுவது - வரும்வேலை.
சஙங இறவு - குற்றம்.
சசங ஒன்னார் - பகைவர்.
சசஎ சோலைநீர் - சோலையினுள்ள ஊற்றுநீர்.
சசஅ இளம்பகல் - பகல் பத்து நாழிகை.
சசகூ யாமம் - இரவில் நடுப் பத்து நாழிகை.
சருக அயர்வு - களைப்பு.
சருங சுழுத்தி - கனவற்ற கடும் உறக்கம்.
சருகூ மெய்த்தொழில் - உடலுறுப்புக்களாற் செய்யப்படும் தொழில்.
சகூஉ அங்குரம் - முளை.
சகூகூ மெய்த்திறம் - உண்மையான வலி.
சகூஎ தாழ்த்தியே - குறைத்தே.
சகூஅ இறந்து - அளவு கடந்து.
,, படுவர் - அழிவர்.
சஎ0 ஈட்டுவர் - சேகரிப்பர்.
சஎகூ எச்சம் - புகழ்
சஅ0 நிச்சலும் - தினமும்.
சஅஉ நகின் - சிரித்தால்.
சகூங அரில் - குற்றம்.
ரு00 செற்று - கோபித்து.
ரு0அ பயிற்றல் - பழக்கல்.
ரு0கூ அழுக்கு-மாசு; பொறாமை.
ருகச தகையர் - தகுதி யுடையவர்.
ருககூ பற்றலர் - பகைவர்.
ருஉச மருந்து - அமிழ்தம்.
ருஉரு காப்பு - பாதரட்சை முதலியன.
ருங0 செல்வுழி - போகும் பொழுது.
ருங0 உள்ளிட - (பிரிவைநினைந்து) வருந்த
ருஙக துஞ்சிய-இறந்த.
ருருஉ ஆர்வலர் - அன்புசெய்யப்பட்டவர்.
ருருங தவல் - கெடுதல்.
ருகூஅ ஒறுத்தார் - பதில் தீங்கு செய்தார்.
ருஎஉ முதல் - வேர்.
ருஎரு அறவோர் - அறம்புரிவோர்.
ருஏகூ துவ்வார் - வறிஞர்.
ருஎஅ நன்மை - சுபகாரியம்.
,, தீமை - அசுபகாரியம்.
ருஅ0 ஆணை - கட்டளை.
கூ0ச சூழ்ச்சி- அறிஞரோடெண்ணுதல்.
கூ0கூ உரை - புகழ்.

மெய்யறம்

கூஉ0 உணர்ச்சி - ஒருமைப்பட்ட உணர்வு.
கூஉ௩ உற்றன - பொருந்தியன.
கூச0 சீர் - பொருத்தம்.
கூசஉ செம்மை - நடுவுநிலைமை.
கூசசு தவாவினை - கெடாவினை (அறம்).
கூசஎ பொது - கணிதமும் பாஷையும்.
சிறப்பு - மற்றையன (பொருண்முதலியன).
கூகூக வினைஞர்-வினைசெய்வோர்
கூகூஉ கடாஅ (பார்த்தோர்) ஐயப்படாத.
கூகூ௩ சிதைப்பினும் வதைப்பினும்.
,, உகாமை-வெளிவிடாமை.
கூகூகூ கொற்றம் - செல்வம்
கூகூகூ அயிராது - சந்தேகியாது.
கூஎச புணர்வு - இல்லாளோடு கூடிவாழும் வாழ்க்கை.
,, ஒழிவு - வீடு.
கூஅஉ அமைத்து முடித்து; செய்து.
கூஅகூ பட்டி - விக்கிரமாதித்தனது மந்திரி.
கூகூ0 விக்கிரமன்-விக்கிரமாதித்தன்.
கூகூரு ஒல்லும் - பொருந்தும்.
எ0க பாடு - பெருமை.
எ0அ உள்ளடக்க-உள்ளம் நடுங்க.
,, மேல்நகை-வெளியில் மாத்திரம் சிரித்தல்.
எ0கூ சலவருள் - வஞ்சகருள்.
எக0 என்பதம்-காட்சிக்கு எளியனயிருக்குந்தன்மை.
எகஉ திறை - கப்பம்.
எக௩ இளையா - பின்னிடாத.
எககூ வினை - போர்.

எஉ0 உளம் கொள-மனம் திருப்தியடைய.
எஉஉ மெய் - உண்மை.
எஉ௩ செவிச்சொல் - பிறன் செவியிற் சொல்லுதல்.
அயல்நகை - பிறன்முகம் நோக்கி நகுதல்.
எஉரு அமையம் - சமையம்.
எஉசு விழைபவற்றை - விரும்புவனவற்றை.
எஉஎ ஐயுறுவகை - சந்தேகியாதவாறு.
,, யாங்கணும்-எவ்விடத்தும்.
எ௩க கூறு-பிரிவு.
எ௩அ முதுவர்-அறிஞர்.
எச0 சொல் - சொல்லிவைத்த.
எசச நன்றுறல் - நன்மையடைதல்.
எசஎ உடன்படல் ஒத்துக்கொள்ளுக.
எருக நாடுவ-விரும்பும் பொருள்கள்.
எருஉ மருவிய பொருந்தியவை.
எருச உணு - உணவு.
எருகூ அயல் - பக்கத்துள்ள.
எகூக அமைதல் - நிரம்பியிருத்தல்.
எகூஉ ஒக்க - சரியாக.
எகூகூ உறுபசி - மிக்க பசி.
,, அரும்பிணி -நீங்காதபிணி.
,, செறுபகை - அழிவு செய்யும் பகைவர்.
எகூஎ சீர் - புகழ்.
எகூகூ தகை - பெருந்தன்மை.
எஎ0 மெய்யறிவு - கடவுள் ஞானம்.
அமைந்து - நிரம்பி.

அரும்பதவுரை.

௭௭௭ அருநிலம் - பகைவரைக் கொல்லும் கருவிகள் முதலிய வற்றைக் கொண்டுள்ள நிலம்.
௭௮௮ அகநெறி - நிலக்கீழ்வழி.
௭௯0 பொறி - கொல்கருவி.
௭௯௩ வலப்படை - வல்லமையுள்ள படை.
௭௯௫ சுரவு - காட்சிக்குப் புலப்படாத படுகுழி முதலியன.
௮௧௭ நடை - ஒழுக்கம்.
௮௧௮ அலக்கண் - துன்பம்.
௮௧௯ உழந்து - வருந்தி.
௮௨0 அழியாது - நீங்காது.
௮௨௧ வினையுள் - வினைபொருள்.
௮௨௩ கிழவர் - உடையவர்.
௮௨௪ காடு - அடர்ந்த செடி முதலியன.
௮௪௯ மேம்பட - மேன்மையுற.
௮௫௧ படுத்தல் - கொல்லுதல்.
௮௫௫ மெய்யியல் - கடவுட்டன்மை.
௮௫௮ உழல்வர் - வருந்துவர்.
௮௫௯ பிணக்குற்று - சண்டையிட்டு.
௮௭௩ பயப்பொருள்-பயன்தரும் பொருள்.
௮௭௫ எரி - தீ.
,, கூர் - கூர்மை.
௮௮௪ மறத்தினர் - வீரத்தை யுடையவர்.
௮௮௫ மா - யானை.
,, பரி - குதிரை.
௮௮௬ அறைப்படுத்து - நிலக்கீழ் வழி செய்து.
௮௮௭ கலங்கள் - கப்பல்கள்.
௮௯௩ வேதனம் - சம்பளம்.
௮௯௪ சீர் - பட்டம் முதலியன.
௮௯௪ பரிசில் - வெகுமதி.
௮௯௭ கூற்றையும் - எமனையும்.
,, ஆற்றல் - வல்லமை.
௮௯௮ இழைத்தது-செய்தசபதம்.
,, இகவாது - தவறாது.
௯0௪ இடித்துக்கூறல் - புத்தி கூறல்.
௯0௫ புணர்ச்சி - சேர்க்கை.
,, பழகுதல் - இடை இடையே கூடல்.
உணர்ச்சி ஒரேவித உணர்வு.
௯௧௧ கிழமை - உரிமை.
௯௧௯ விழையார் - பகைவர்.
௯௨0 புதுமையில் - கண்டமாத்திரத்தில்.
௯௨௧ ஆகா - விலக்கவேண்டிய
௯௨௩ உறுவதே - தமக்கு வருவதையே.
தூக்கும்-ஆராயும்; நோக்கும்.
௯௨௫ ஒல்லும்-செய்யமுடியும்.
,, உஞற்று - செய்யாத.
௯௩0 நடர் - பொய்யர்.
௯௩௫ எதிர் உணர்வு-மாறுபட்ட உணர்ச்சி.
இறுகுஉளம்-பற்றுள்ளம்; உலோபம்.
௯௩௭ தட்பம்-குளிர்ச்சி- கருணை.
௯௩௮ தகல்-தகுதி.
௯௪௩ அறைப-சொல்வர்.
௯௪௮ விடுப்பதோ - விட்டு விடுவதோ.
௯௫௧ அடல் - வெல்லுதல்.
௯௬0 மேய்வார் - (அரியவற்றைக்) கவர்வார்.
௯௯௧ மைந்து - வலி.

மெய்யறம்

௯௬௯ தலையழித்தல் - நெருக்கி யழித்தல்.
௯௭௫ மாண்டார் - மாட்சிமைப் பட்டார்.
௯௭௮ ஆங்காது - தாமதியாது.
௯௯௧ கூகை - கோட்டான்.
௯௯௮ கூம்பும் - அடங்கியிருக்கும்.
௯௯௯ அடர்க்கும்-கொல்லெழும்.
௧00௨ முதல்நிலம்-குறிஞ்சி.
௧00௫ முரண் - வலி.
௧00௭ மலையரண் - மலைசூழ்ந்துள்ள கோட்டை.
௧00௮ உறுபகை பெரும்பகைவர்.
௧0௧௧ ஆற்ரு - இயலாதார்.
௧0௧௩ உயின் - பிழைப்பின்.
௧0௩௧ முறை - நியாயம்.
௧0௩௨ அடாது - கொல்லாது.
,, தலை - சிறப்பு.
௧0௬௬ அடிமுதல் - மூலதனம்.
௧0௭௧ இறை - இறைப்பணம்.
,, இறை - அரசன்.
௧0௭௪ இறைகொள - இறைப்பணம் வசூலிக்க.
நடுவு உதவி - நீதிவழங்க.
௧0௭௫ ஓம்பலே-காப்பை.
௧0௮௧ கடிவது - களைவது.
௧0௮௬ நவை - குற்றம்.
௧0௯௧ அறுக்கும் - நீக்கும்.
௧0௯௩ ஆற்றுதல் - செய்தல்.
௧0௯௪ துப்புரவு - உணவுமுதலியன.
௧0௯௬ ஆறுஅறிவினர் ஐம்பொறி யறிவுகளையும் பகுத்தறிவையும் கொண்டுள்ள மனிதர்.
அளிப்பவர் - இரட்சிப்பவர்.
௧௧0௬ முகை - அரும்பு.
,, அனர் - போனறவர்.
௧௧௧௨ போன்ம் - போலும்.
௧௧௧௭ உகுத்தவர் - சிந்தியவர் விடுத்தவர்.
௧௧௧௮ ஊறு - துன்பம்.
௧௧௨௨ ஆசினர் - குற்றம்வர்.
௧௧௨௬ கரவினில் - மறைவில்.
௧௧௩௩ இயற்கு - தன்மைக்கு.
௧௧௩௯ தெறுதலின் கொல்லுதலின்.
௧௧௪௮ நிரயம் - நரகம்.
,, கழி - மிக.
௧௧௫௧ ஆடி - கண்ணாடி.
௧௧௬0 அடுதல் - கொல்லுதல்.
,, தகுதி - நீதி.
௧௧௬௪ இந்தியம் - ஐம்பொறி.
௧௧௬௬ குறளை-புறங்கூறல்.
௧௧௬௯ பின்றைநாள்- பின் வரும் நாள்.
௧௧௭0 உற்ற - துன்பமடைந்த
,, உறுத்தும் - வருத்தும்.
௧௧௭௮ சமன் - எமன்.
௧௨0௧ கரி - சாக்ஷியம்.
௧௨௧௧ அடங்கிய - புலப்படாத.
௧௨௩௮ ஆணவம் - அகங்காரம்.
௧௨௫0 ஆற்றி - செய்து.

அரும்பதவுரை முற்றிற்று.

௯0௬௪ ௯

X;VC:56